உ

குமரன்துணை.

விவேகபாநு.

வால்யூம் 4. } 1905௵ அக்டோபர்௴ { புத்தகம் 10.

வித்தை XV

[முன் தொடர்ச்சி]

இயற்கையிலேயே ஒருவருக்கு ஆசிரியத்தன்மை அமைகிறதே ஒழிய செயற்கையினால்மட்டும் வந்துவிடாது எனறும் போதனா முறை அநுபவத்தால் ஏற்படவேண்டுமேயொழிய திடீரென்று ஒருவருஷம் போதனாமுறைப்பாடசாலைகளில் நுழைந்து வெளிப் போந்தால்மட்டும் வந்துவிடாதென்றும் கூறினோம். கீழ்த்தரபோத னாமுறைப்பாடசாலைகளில் தக்க அறிவுள்ளவர்களைச்சேர்ப்பதற்குப் பிரதியாக எட்டுமிரண்டும் அறியாதவர்களையும் சேர்த்துவிடுகின்ற னர். ஆனால் இவ்வழக்கம் வரவர நிறுத்தப்பட்டு வருகின்றது. சிற் சில பட்டணங்களில்மட்டும் போதனாமுறைப் பாடசாலைகளை ஏற்ப டுத்தி அவைகளில் போய்ப்பழகவேண்டுமென்றும் ஏற்படுத்தியிருப் பது தேசத்துக்குச் சமீபகாலத்தில் க்ஷேமம் செய்யமுடியாது. கிரா மங்களில் உழைத்துவரும் உபாத்தியாயர்களைச் சமீப இடங்களில் சேர்த்து மூன்று நான்கு மாதங்கள் தக்கவர்களைக்கொண்டு போத னாமுறை பயிற்றுவித்தாலே போதுமானது. இக்காலம் ஸெஸ்ஷ னல் ஸ்கூல் என்று வைத்துக்கொண்டிருப்பதில் ஒருசிறிதுமறியாத வர்களைச்சொற்பம் அறிவூட்டிப்போதனாமுறைப்பாடசாலைக்கு அனு ப்புகிறார்கள். இவ்வழகக்ததை நிறுத்தி அறிவுள்ளவர்களுக்குப் போதனாமுறைகளைச் சொற்பகாலத்தில் கற்பித்துத்தேர்ச்சி உண் டாக்குதல் மிக்கநலமாம். பத்துக்கிராமங்களில் உள்ள உபாத்தியா யர்களை ஒரு பெருங்கிராமத்திற் சேர்த்து மூன்று நான்கு மாதகாலங் கள் தக்கவண்ணம் பயிற்றுவித்தால் மிக்க நலமுண்டாகும். தேசத்

தின் தற்காலநிலைமைக்கு இம்மாதிரியே மிக்கபொருத்தமாகும். தற்காலம் கிராமக்கணக்கர்களைச் சர்வேவேலைகளுக்குப் பழக்குகிறவண்ணம் போதனுமுறை விஷயத்திலும் செய்தல் போதுமானது. இயற்கையிலேயே போதனுமுறையமையாத ஆசிரியர்களுக்கு இரண்டுவருஷ போதனைகொடுத்தும் பயனில்லை. இயற்கைச்சாமர்த்தியம் உள்ளவர்களுக்கு மூன்று நான்கு மாதகாலப்பயிற்சியே போதும். நம்கிராமங்களின் நிலைமையையும் ஜனங்களின் அறியாமையையும் சீர்தூக்கிப் பார்க்குங்காலத்தில் தக்க அறிவுள்ளவர்களைத் தெரிந்தெடுத்துச்சிறிது காலம் போதனுமுறைகளைப்பயிற்றி விட்டுவிடுவதே நலம். அவ்வாறுசெய்வதாலேயே கல்வி யபிவிர்த்தியடையும். அவ்வாறு பயிற்சி யடையச்செய்வதற்கு அதிகபணமும் செலவில்லை. ஒரு ஜில்லாவில் ஒரேகாலத்தில் பத்துப்பதினைந்து இடங்களில் இம்மாதிரியான ஏற்பாட்டைச்செய்தால் கூடிய சீக்கிரம் போதனுமுறையில் உபாத்தியாயர்கள் தேறிவிடுவார்கள். ஊரெங்கும் கல்வியும்கடிதிற் பரவும்.

வேறொருவிஷயம் இவர்களால் கவனிக்கத்தக்கது. போதனுமுறைப்பாடசாலைகளில் பயில்பவர்களுக்குச்சிறிது உபகார சம்பளம் அளிப்பதால் அவர்களை மூன்றுவருஷகாலம் வித்தியாயிலாகாவில் வேலைசெய்யவேண்டும் என நிர்ப்பந்தம் ஏற்படுத்தியிருக்கின்றனர். அவ்வித நிர்ப்பந்தத்தால் பலர் எப்படியாவது அக்காலத்தைக் கழிக்கவேண்டி எதாவது ஒரு பாடசாலையில் ஏற்படவேண்டுமென்று கருதித்தங்கள் மனத்திற்கு விரோதமாய் அற்பசொற்ப சம்பளங்களை வாங்கிக்கொண்டு வேலைசெய்ய ஆரம்பிக்கிறார்கள். அச்சம்பளம் வயிற்றுக்குப் போதாமையால் பட்டணங்களிலேயே அவ்வாறான வேலை தேடிக்கொண்டு வேறுவகையிலும் தங்கள் காலக்ஷேபத்துக்கு வகைதேட வேண்டிவருகிறது. ஆகையால் நாம்சொல்லும் விதத்தில் யாதொரு நிர்ப்பந்தத்துக்கும் இடமில்லை. உபாத்தியாயர்கள் போதனுமுறைப் பயிற்சிபெறுங்கால் தங்கள் பள்ளிகளையும் கவனித்துக்கொள்ளும்படி விடவேண்டும். காலையில் தங்கள் பள்ளிகளில் வேலைபார்க்க இடங்கொடுத்து மாலையில் மூன்றுமணி சாவகாசம் போதனுமுறைப்பாடசாலையைக் கவனிக்கிறதென்று ஏற்படுத்தினால் எல்லோருக்கும் சௌக்கியம் உண்டாகும். கிரமத்தார் தக்க

அறிவுள்ளவர்களுக்கே தக்க உதவிசெய்ய முயல்வார்கள். ஆகையால் இவ்வித நிர்ப்பந்தங்கள் ஏற்படாதிருந்தால் அவர்களும் தக்க அறிவினர்க்குத்தக்க சகாயம் செய்ய இடமுண்டு. உபாத்தியாயர்களுக்கும் பழையகாலத்தில் நடந்து வந்ததுபோல் தக்கவரும்படியும் கிடைக்கும். கிராம பாடசாலைகளுக்குத் தக்கஅறிவுடையவர்களும், கிராமப்பழக்கமுள்ளவர்களும், அதிகம் மேற்பார்ப்போரும், வேண்டுமேயொழிய அதிக போதனுமுறைமை தெரிந்தவர்வேண்டுமென்பது அநாவசியம். போதனுமுறை பயின்றவர்கள் கிராம இயற்கையையும் அக்கிராமத்தாருக்கு வேண்டிய படிப்பையும் சீர்தூக்கிக் கல்வி போதிப்பதைவிட்டு தற்காலம் தாங்கள் பயிலும் சிலவிஷயங்களைக் கிளிப்பிள்ளைகளைப்போல் சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். அவை கிராமத்தார்களுக்கு ஒவ்வாதனவாயிருக்கின்றன. ஆகையால் அவர்கள் அம்முறையை வெறுக்க ஆரம்பிக்கின்றனர். பழைய பள்ளிக்கூடங்களிலுள்ள நல்ல வழக்கங்களை அனுசரித்துப்பாடசாலைகள் நடத்தப்பட்டால் கிராமத்தார்கள் உதவிசெய்யச் சித்தமாயிருப்பார்கள். முற்காலத்தில் கிராம உபாத்தியாயர் தக்க அறிவுடையவராயிருந்து வந்திருக்கிறார்கள். பலகதை புராணங்களை ஜனங்களுக்குள் பரவச்செய்து பொதுஜன அறிவையும் அபிவிருத்திசெய்து வந்திருக்கிறார்கள். ஓர் உபாத்தியாயர் கம்பராமாயணம் பிரசங்கம் பண்ணுவதும், மற்றொருவர் கந்தபுராணம் பிரசங்கம்செய்வதும் மற்றொருவர் பாரதம் பிரசங்கம் செய்வதுமாயிருந்தார்கள். அக்காலம் நீங்கவே கிராமபாடசாலைகளின் வன்மையும் குன்றிப்போயிற்று. ஆகையால் இவ்விஷயத்தில் தீர்க்காலோசனைசெய்து கவர்ன்மெண்டார் கிராமபாடசாலைப் போதகர்களையும் பாலபோதகர்களையும் தக்க அறிவுள்ளவராகப்பொறுக்கி எடுப்பதுமன்றி அவர்களுக்கு இருக்கும் நிர்ப்பந்தங்களையும் நீக்கல்வேண்டும்.

மற்றொருவிஷயம் கவனிக்கத்தக்கது. கிராமபாடசாலைகளுக்கு ஏற்படும் உபாத்தியாயர்களுக்குச் சுயபாஷையே பிரதானம். தற்கால ஏற்பாட்டின்படி அவ்வாசிரியர்களுக்குப்போதனுமுறைபயிற்றுவிப்போர் அநேகருக்குச்சுயபாஷாஉணர்ச்சிபோதுமான மட்டும்கிடையாதெனலாம். பீ.ஏ., எல்.டி.கள் என்று பட்டப்பெயருக்குமட்டும் இவர்களைத் தெரிந்தெடுக்கின்றார்களே ஒழிய அப்போதகாசிரியர்கள் சுயபாஷா

ஞானமுள்ளவர்களா? அவர்கள்போதனை கிராமபாடசாலைகளை அபிவிருத்திபண்ணுமா? அவர்கள் அக்கிராமவிஷயங்களை நன்குணர்ந்தவர்களா? என்றவிஷயங்களைக் கவனியாமல் பட்டப்பெயர்களுக்குமட்டும் ஆசைப்பட்டு அவர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். அவர்களோ பட்டணங்களிலும் சர்வகலாசாலைகளிலும் ஆங்கிலப்பயிற்சியிலும் நெடுநாட்பழகியவர்கள். குருடனைப்பிடித்து இராஜவிழி விழியென்று சொல்வதுபோல் அவர்களைக் கிராமபாடசாலைகளுக்குஆசிரியர்களைப் பயிற்றச்சொன்னால் யாதுசெய்வார்கள். சிற்சிலசமயங்களில் மலையாளிகளைத் தமிழ்தேசங்களுக்கும் தமிழர்களைத் தெலுங்கு, மலையாளதேசங்களுக்கும் தெலுங்கர்களை மலையாளதேசங்களுக்கும் நியமனஞ்செய்துவருகிறபடியால் அதனால் உண்டாகும் கேட்டுக்கு அளவில்லை. இம்மட்டோ? இப்போதனாமுறைப்பாடசாலைகளை மேற்பார்ப்பவரோ ஓர் ஐரோப்பியர். அவருக்குச் சுட்டுப்போட்டாலும் சுயபாஷாஞானம் கிடையாது. அவர் சுயபாஷைகளைப் பேற்கப்பயிற்சிபெறும் மாணாக்கர்களை எவ்வாறு பரீக்ஷிப்பாரோ நமக்கு விளங்கவில்லை. சில ஐரோப்பியபாடசாலைகளின் மேல்விசாரணைக்கு ஓர் ஐரோப்பியர் வேண்டியிருந்தால் அதற்காக தேசக்ஷேமத்தைச் சிறிதும் கவனியாமல் நினைத்தவண்ணம் ஏற்பாடுசெய்துவிடுகிறதா? கிராமபாடசாலைகளுக்குப் பயிற்றும் ஆசிரியர்களை மேற்பார்ப்பவர் சுயபாஷாஞானமுள்ள சுதேசிகளாகவேயிருத்தல்வேண்டும். போதனாமுறைபயிற்றுகிறவர்களும் சுயபாஷாஞானம் நன்கமைந்தவர்களாகவே இருத்தல்வேண்டும். சிலவருஷங்களுக்குமுன்னர் இவ்வாறே இருந்துவந்தார்கள். தக்கவர்கள் போதனாமுறைப்பாடசாலைகளின் தலைவராக இருந்துவந்தனர். சுயபாஷாஞானம் அன்னவர்களுக்கு எவரும் அதிசயிக்கத்தக்கவண்ணம் நிரம்பியிருந்தது. உதாரணமாகக் காலஞ்சென்ற சேஷையங்கார், மார்டின்வின்பிரெட், திருச்சி கிருஷ்ணசாமி பிள்ளை, உபகாரசம்பளம் பெற்று ஜீவித்துவரும் மகா-ள-ள-ஸ்ரீ வேலுப்பிள்ளையவர்கள் முதலியோர் தக்க சுயபாஷாஞானமுள்ளவர்களே. அவர்க்ள் போதனாமுறைகள் எவரும்வியக்கத்தக்கனவாயிருந்தன. வரவரப் பட்டப்பெயர்பெற்ற எவரும் போதனாமுறைக்கு அருகர் என்றுதுணிந்து காரியங்கள் நடந்துவருவது சரியாகத் தோற்றவில்லை. ஒவ்வொருவருக்கும் பொருத்தமாயிருக்கும்படியான அங்

கியைத் தைத்தால் நலமாமே ஒழிய ஒரேமாதிரியான அங்கிகள்பலவற்றைத்தைத்து எல்லோருக்கும் பொருந்தச்செய்வது நலமாமோ? போதனாமுறைபயின்றவர்களை அடிக்கடி மேற்பார்வைபார்த்துத்திருத்தும் பக்ஷத்தில் தக்க ஆசிரியர்களாவார்கள். தற்காலத்திலும்போதனாமுறைபயின்று சிலகலாசாலைகளிலும் பிரதமபாடசாலைகளிலும் ஆசிரியராயிருப்பவர்கள் அப்பள்ளிகள் சேர்ந்தபின்னரே தக்கபழக்கமடைந்து திருந்துகிறார்களே ஒழிய வரும்பொழுது யாதொன்றும் அறியாமலே வருகிறார்கள். இவ்விஷயத்தைச் சுதேசிகளே தக்க வண்ணம் நடத்தவல்லவர்கள். சுயபாஷாஞானமே இதற்கு அதிகம் தேவை. ஆங்கிலத்திலும் தக்கபயிற்சிவேண்டுமென்பதை நாம் மறுக்கவில்லை. இரண்டுபாஷாஞானமும் இன்றியமையாததென்பதே நம் கருத்து. அதுவே கிராமபாடசாலைகளுக்கும் தேசத்துக்கும் க்ஷேமம். கிராமங்களில் கல்விபரவி கிராமத்தார்கள் க்ஷேமமடைதலே தேசக்ஷேமத்தை அபிவிருத்திபண்ணும். ஆகையால் இம்முக்கிய விஷயத்தில் கவர்ன்மெண்டார் நீளநினைந்து தக்கசீர்திருத்தஞ்செய்யவேண்டும். பிறர்பார்த்துப் பிரமிக்குப்வண்ணம் பட்டதாரிகளை அடுக்கடுக்காய் நியமனஞ்செய்து பெரும் பணத்தை வாரியிறைப்பதில் சிறிதும் பயனில்லை. காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப விஷயங்களை நீள நினைந்து செட்டுங்கட்டுமாய் எவருக்கும் தொந்திரவின்றிக் காரியத்தை முடிக்கவேண்டுமே யொழியக் காரியங்களை பலர் பிரமிக்கும்படி மாத்திரம் செய்து பகட்டுவதில் யாதுபயன். அறிவும் அநுபவமுமே கிராம பாடசாலைகளை அபிவிருத்தி பண்ணும்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

4-3-0

சிந்தாமணி சரித்திரம்

2-வது அத்தியாயம்.

மறுநாட்காலையில் மேலே சொல்லிய கிழவியும் வேறு சில மங்கையர்களும் அம்மலை யருவியில் ஸ்நானஞ் செய்து வஸ்திரம் விளக்கிக்கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவர் அக்கிழவியை நோக்கி:

"அத்தை! உங்கள் கிருகத்தில் நேற்று ஒரு சிறிய பெண் வந்திருந்தாளே, அவள் யார்? அவள் உங்கள் வீட்டுக்குவரக் காரணமென்ன?" என்று வினவ அதற்கு அக்கிழவி,

"சங்கரி! அப்புதுமையை நான் என்னவென்று சொல்லட்டும். உலகத்தில் மனிதர்களைப் பணம் என்னபாடுபடுத்திருக்கிறது. அந்தப் பெண்ணினுடைய நிர்ப்பந்தமான நிலைமையைப்பற்றி நான் கேட்டது முதல் எனக்கு ஆருத்துயரம் உண்டாகியிருக்கிறது. அவள் வைசிய ஜாதியிற் பிறந்த குழந்தை. அவளுடைய குணமும் நடத்தையும் மிக்க அற்புதமாயிருக்கின்றன. அவள் பெயரும் அவள் குணத்துக்குத் தக்கவண்ணமமைந்திருக்கிறது. அவளுடன் சொற்ப காலம் சம்பாஷித்துக்கொண்டிருந்து பிறகு "உன் பெயர் என்ன" வென்று அவளைக் கேட்டேன். அதற்கு அவள் மிகவும் அழகாய் மறுமொழி சொன்னதாவது:—மிகவும் சாமான்யமான ஒரு பூண்டுக்கு விஷ்ணுக்கிராந்தமென்று பெயரிட்டிருப்பதுபோல் அம்மா, அதிர்ஷ்டமற்ற பாவியாகிய எனக்கு என் பெற்றோர்கள் **சிந்தாமணி** யென்று பெயரிட்டிருக்கிறார்கள். நான் வருந்துங் காலையில் ஏனென்று கேட்க எனக்கு ஒருவருமில்லாமல் துர்ப்பாக்கியத்துக்கு உள்ளாவேன் என்பது கருதி ஒருகால் சிந்தாமணி யென்று எனக்குப் பெயர் வைத்தார்களோ வென்று நினைக்கிறேன்" என்று சொல்லி இருகண்களிலும் நீர்பெருக விம்மி விம்மித் துக்கப்பட்டாள். அது கேட்டு நானும் என் நாயகனும்,

"அம்மா! நீ யேன்இவ்வளவு மனக்குறைவு அடைந்திருக்கிறாய். எல்லாருடைய குறைகளையும்தீர்ப்பதற்குப் பரமதயாளுவாகிய பரமேசுவரன் சித்தமாக இருக்கின்றார். மெலிந்தோர்க்கு அவரன்றி யார் துணை. நீ ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். உன் வரலாறுகளைச் சொல்லவேண்டுமென்று நாங்கள் ஆறுதலாகக் கேட்டோம். அதற்கு அவ்விளமடந்தை "அம்மா! பெற்றோர்களை யிழந்த எனக்கு அவர்களிலும் மேலான அன்பு நிறைந்த உங்களுடைய சகவாசம் இச்சமயத்தில் கிடைத்ததே ஏதோ நான் செய்திருந்த சொற்ப புண்ணியத்தின் பயன் போலுமிருக்கின்றது.

என் வரலாறுகளை உங்களுக்கு உரைக்கில் உங்கள் மனத்துக்குக் கிலேசத்தை உண்டாக்கக்கூடாதென்பது என் கருத்து. ஆயினும் இவ்வளவு அன்புடன் கேட்கும் உங்களிடத்தில் நான் வரலாறுகளைச் சொல்லாமல் பின் எவரிடம் சொல்லப்போகிறேன். என்னுடைய மாமனார் ஐந்து லட்சம் ரூபா பெறுமான ஆஸ்தியுடைய சீமான். அவர் ஐந்து கப்பல்களை வைத்து இராமநாதபுரத்தில் வியாபாரம் நடத்திவந்த பெருமையையுடையவர். என்னுடைய கணவன் அவருடைய மூத்தமனைவியின் குமாரர். என் நாயகன் இளம்பருவமாயிருக்கையில் அவருடைய தாயார் பரலோகஞ்சென்றார்கள். என் மாமனாருக்குப்பிறகு வந்த மனைவிக்கு ஒரு குமாரன் இருக்கிறான். என் மாமனாரும் இறந்துபோனபின் அவருடைய சம்பத்துக்கள் இளையமாமியாரே கைவசம்வைத்து ஆண்டுவந்தனள். நான் என் பெற்றோர்க்கு ஒரே பெண். அவர்களுக்கு வேறுசந்ததி இல்லை. என்னுடைய தந்தை இறந்தபின் என் தாயார் என்னை என் நாயகனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுத்து என்னுடைய பிதாவுக்குச் சொந்தமான இரண்டு லட்சம் ரூபா பொறுமான சம்பத்துக்களையும் எனக்கு ஸ்திரீதனமாகக்கொடுத்தாள். அம்மா அவளும் நான் என் புருஷன்வீட்டுக்குப் போனவுடன் புண்ணியலோகம் சென்றாள். வியாபாரநிமித்தமாகப் பல ஊர்களுக்குச்சென்ற என்கணவன் இப்பால் ஐந்துவருஷங்களாக என் கிருகத்துக்குத்திரும்பி வரவில்லை. இரண்டுமாதங்களுக்குமுன் என் இளையமாமியார் என்கணவன் இறந்துவிட்டதாக ஒரு பத்திரிகை வந்திருப்பதுபோல ஒரு லிகிதத்தை எனக்குப் படித்துக்காண்பித்து என்னைச்சோகக்கடலில் முழுகும்படி செய்தாள். நான் அதை மெய்யென்று நம்பித் தீராவிசனத்துக்கு ஆளாயிருக்கையில் என்னையும் தன்வீட்டிலிருக்கக்கூடாதென்று துன்பப்படுத்தித்துரத்திவிட்டாள்" என்று சொல்லியபிறகு ஒன்றும் சொல்லமுடியாமல் மௌனமாய் இருந்தாள்" என்று அக்கிழவி சொன்னாள்.

இதைக்கேட்ட சங்கரி.

'ஐயோ! இதென்னபாவம். இக்கொடுமை எல்லா ஜாதியிலுமிருக்கிறதே. பணக்காரக் குடும்பமென்று மயங்கி அவன் தாயார் பைத்தியகாரி, பெண்ணையுங்கொடுத்துப் பொருளையுங் கொடுத்தாள்போலும். 'மூத்தாள் பிள்ளை இளையாள் தாயார்" என்று எங்கெங்கு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் இந்தக்கோளாறுதானே. இராமனைக்காட்டிலும் நல்லபிள்ளையுண்டா? சீதையைக்காட்டிலும் நல்ல மருமகளுண்டா? அவர்களைப்பரதேசிகளாக்கிக் கைகேயி காட்டிற்குத் துரத்தவில்லையா? அத்தாய்! அந்தப்பெண் பிறகு என்ன சொன்னாள்? என்று கேட்கக்கிழவி

'அம்மா! அரைநாழிகை கழித்துச் சொற்பம் சமாதானமாகி அந்தப் பெண்

"அன்பு நிறைந்த பெரியோர்களே! நான் உடுத்தபுடைவையுடன் என் பிறந்தஊராகிய தேவிபட்டணத்துக்குப் போனேன். அங்குஎன்னை ஆதரிக்க ஒருவருமில்லாதிருப்பினும் என் பாலியத்தில் என்னுடன் கூடவிளையாடிக் கொண்டிருந்த என்னுடையதோழி அன்புடன் என்னை அழைத்துச்சிலநாள் ஆதரித்துவந்தாள். என்னுடைய துர்ப்பாக்கியத்தைப்பார்த்து அது தனக்கு வந்ததுபோல அளவில்லா வருத்தங்கொண்டு என்னைக் காப்பாற்றிவந்தாள். ஒரு நாள் அவள் வீட்டுக்கு எதிர்த்த மனையில் வந்திருந்த ஒரு செட்டியார் தான் மலையாளம் போயிருந்ததாகவும், எனது கணவன் அவ்விடத்தில் ஜீவந்தாக ஓர் அச்சிமங்கையுடன் வாழ்ந்துகொண்டிருப்பதாகவும் அவளுடைய மயக்கத்தினாலேதான் தன் வீட்டையும் தன்னிலைமையையும் மறந்து அவளுடைய வருதிக்குள்ளாகி இருக்கிறார் என்றும் சொன்னார். உடனே கணவனிருந்தும் அவரருகில் அமர்ந்து பணிவிடை செய்யாத பெண்பிறவிக்கு இகத்திலாவது பரத்திலாவது ஒரு கதியுமில்லை என்று நினைத்து எவ்விதத்திலாவது அவளுடைய முகத்தைத் தரிசனம் செய்து அவருடைய பாதத்தில் விழவேண்டுமென்று புறப்பட்டுவந்தேன். என் கணவனிருக்கும் இடத்தை நான் அறிந்து அவரைத் தரிசிப்பதற்கு வேண்டிய உபாயங்களை நீங்கள் எனக்குச் சொல்லியருளினால் உங்களுக்குக் கோடிபுண்ணியம் உண்டு. என்னைப் பெற்றோர்களும் நீங்கள். இவ்வுலகமெல்லாம் நிறைந்து எல்லாவுயிர்களையும் பாதுகாக்கும் சதாசிவனும் பரமேசுவரியும் நீங்களே என்று மிக்கபரிதாபத்துடன் குயிலிசை போன்ற குரலுடன் உரைத்து எங்களை வணங்கினாள். இரண்டுநாளிருந்துவிட்டுப் போகலாமென்று நாங்கள் சொல்லியும் அவள் கேட்கவில்லை. அவள் உடம்போ வாடி வதங்கிப் போயிருக்கிறது. அவளுடைய விவேகமும் தெய்வபக்தியும் இவ்வளவென்று சொல்லி முடியாது. என் நாயகன் இதைக்கேட்டுத் துயரத்தினால் நேற்றுமுழுதும் ஒரு திவலை நீரும் அருந்தவில்லை. உடனே அவருடைய தம்பி மலையாளத்திலிருப்பதால் அவளுக்கு வேண்டிய உதவி செய்யும்படி ஒருபத்திரிகையையும் எழுதிக்கொடுத்து ஒருவண்டி யமர்த்தி அதில் அவள் சௌகரியமாகப்போகும் வண்ணம் ஏற்பாடு செய்தார். என் அடுத்தவீட்டுச் சுந்தரஅம்மாளும் அவள் தங்கையைப்பார்ப்பதற்கு மலையாளத்துக்குப் போகவேண்டுமென்று சொன்னதால் அவளையும் அந்தப் பெண்ணுக்குத் துணையாக அந்த வண்டியில் அனுப்பினார். அவர்கள் இன்று காலையில் புறப்பட்டு மலையாளத்துக்குப் போய்விட்டார்கள். இஃதென்ன கண்றாவி. மலையாளத்தைத்தருமராஜ்யம் என்று சொல்லுகிறார்கள். அங்குப்போகிற மனிதர்கள் உருப்படுகிறதில்லையே. அங்குப்போகின்ற காவாலிகளுக்குத் தின்பதற்கு ஊட்டுப்பிறையும் பாழாகப் போவதற்கு அச்சி வீடுகளுமிருக்கும்பொழுது அதுஎன்ன தரும இராஜ்யமோ தெரியவில்லை." என்றுசொன்னாள்.

(இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணியஐய்யர்.

ஜப்பான்தேச சரித்திரச்சுருக்கம்.

௯-ம் அதிகாரம்.

ஷோகர்களின் துரைத்தனம் 1800–1853.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் முன்னதிகாரத்தில் கூறியவாறு ஐயாஸுவால் ஸ்தாபிக்கப்பட்ட டோகுகாவாவம்சத்தார் ஷோகர்களாயிருந்து துரைத்தனம் நடத்திவந்தார்கள். இவர்கள் 1850-ம் ஆண்டுவரையிலும் 50 வருஷகாலம் இராச்சியத்தில் கலகம், குழப்பம் யாதொன்றுமில்லாமல் குடிகள் சமாதானமாய்ச் சுகித்துவாழப் பரிபாலித்துவந்தனர். இந்நீண்ட சமாதானகாலத்தின் முற்பாகத்தில் அரசுநடத்திவந்தவன் அயநாரி என்னும் ஷோகன். இவன் 1787-ம் வருஷம் முதல் 1836-ம் வருஷம் வரையிலும் 59 வருஷகாலம் துரைத்தனம் செய்துவந்தனன். இவன் பின்பு தன் பட்டத்தையும் ராஜ்யாதிகாரத்தையும் தன் மகன்வசம் ஒப்புவித்துவிட்டுத்தான் கவலையொழிந்து ஐந்துவருடகாலம் ஜீவித்திருந்து பின்பு மரணம் அடைந்தனன். இவ்வாறு தந்தை தான் ஜீவித்திருக்கையிலே தன் உரிமைகளை மகனுக்கீந்து தான் துரைத்தனத்தை விட்டுவிலகியிருத்தல் இவர்களுக்கு நெடுநாளை வழக்கமாயிருந்தது. ஆதலின், அயநாரிக்குப்பின் அவன் மகன் ஐயோஷி தன் தந்தையின் காலத்தே அரசாட்சியைப்பெறுவானாயினன்.

இக்காலத்தில் கியோடோநகரத்தில் பெயருக்குமாத்திரம் பட்டம்வகித்துத் துரைத்தனத்தில் யாதும் சம்பந்தப்படாமல் இருந்துவந்த ஜப்பான் சக்கிரவர்த்திகளைப்பற்றிக்குறிப்பிட்டு எடுத்துச்சொல்லத்தக்க விருத்தாந்தம் ஒன்றுமில்லை. ஆயினும், ஒருவிஷயம் மாத்திரம் கவனிக்கத்தக்கது. இரண்டு முறைகளில் ஆண்பாலாரன்றிப் பெண்பாலார்கூடச்சக்கிரவர்த்தினி ஸ்தானத்தில் இருந்து சிங்காசனம் சிறக்கவீற்றிருந்துவந்தனர். ஆதலின், ஜப்பானியர்களுள் பெண்பாலாரைப்பட்டத்துக்குரியவரல்லரென்று விலக்கிவைக்கும் சம்பிரதாயம் இல்லையென்று உணரத்தக்கது. இவ்விருவரில் பின்னவள் 1763-ம் வருடம் முதல் 1813-ம் வருடம் வரையில் அரசியாயிருந்துவந்தனள்.

19-ம் நூற்றாண்டின் முற்பாதியில், அயநரியின் காலத்திலும் அவன்மகன் ஐயோஷியின் காலத்தும் இருந்த அமைதி அதற்கு முன்னும் இரண்டு நூற்றாண்டுகளாக இருந்துவந்தது. இது இராச்சியத்தின் சுபிக்ஷத்துக்குக்காரணமாயினும் ஷோகர்களின் அதிகாரம் நாளுளும் க்ஷீணத்திற்கு ஏதுவாயிற்று. ஷோகர்கள் யுத்தமும் கலகமும் இல்லாமையினாலே படைத்தொழிலும் சௌரியமும் க்ரமேண இழந்துபோய், கியோடோவில் உள்ள சக்கிரவர்த்திகளைப் போலவே தாமும் சிற்றின்பமும் சுகமும் தேடுவாராய்த்தீரமும் தாளாண்மையும் முற்றும் இழக்கலுற்றனர். துரைத்தனகாரியங்களைக் கூடமுன்போலத் தாமே நேரிட்டுமுயன்று விசாரித்தலைவிட்டுத் தமக்குக்கீழ்ப்பட்ட உத்யோகஸ்தர்களுக்கு ஒப்பித்துவந்தனர். அதனால், ஷோகனுக்கு முன்னிருந்த பெருமையும் மகிமையும் வெகுவாகக்குறைந்துபோயிற்று.

இக்காலத்தில் ஜப்பானியர் மட்கலங்கள், வார்ப்புக்கள், வாட்படைகள் முதலான சிற்பவிற்பனமானகைத்தொழில்களில் விசேஷ அபிவிர்த்தியையடைந்து இத்தொழில்களில் இவர்களை மிஞ்சவல்லவர் ஒருவரும் இல்லை யென்னும்படிச்சிறப்புற்றிருந்தனர். ஆயினும், தமக்குத்தெரிந்ததே தமக்குப்போதுமானது என்று எண்ணினார்களேயன்றி இதர தேசத்தவர்களைப்பார்த்து நூதனமானவித்தைகள் கற்றுக்கொள்ளவேண்டும் என்னும் எண்ணமே இவர்களுக்கு இல்லாமற்போயிற்று. அந்நியதேசங்களுக்குத் தாங்களும் போவதில்லை. அந்நியதேசத்தவர்களைத் தம்தேசத்துக்கும் வரவிடுகிறதில்லை. ஐரோப்பியர்களுக்கு இடம்கொடுத்தால் அவர்கள் எங்குத்தம் இராச்சியத்தைக் கவர்ந்துகொள்வார்களோவென்கிற பயம் அவர்கள் மனத்தில்குடிகொண்டிருந்தது. இதனால்தான் முன்யே சுமதத்தார் (Jesuits) என்னும்கிறிஸ்தவப்பாதிரிகள் வந்து அநேகரைக்கிறிஸ்தவர் ஆக்கியகாலத்தில் பின்பு அக்கிறிஸ்தவப்பூடும் இல்லாமல் துரைத்தனத்தார் கொடுமையாக அவர்களைத்தண்டித்து அம்மதத்தை அழித்தனர். உலாந்தர்க்குமாத்திரம் நாகசாகி யென்னும் ஒரு துறைமுகத்தில் வந்திறங்கி வர்த்தகம் செய்ய இடம்கொடுத்திருந்தனர். இவ்வைரோப்பிய வியாபாரத்தால் தங்களுக்கு நஷ்டமே

யன்றி லாபமொன்றும் இல்லையென்று ஜப்பானியர்களில் அநேகர் எண்ணியிருந்தனர்.

இவ்வாறு ஜப்பானியர் அயல்தேசத்தாரைத் தம்மிடத்தில் அணுகவொட்டாமல் துரத்தித் தம்மை உயர்த்தி முன்னுக்குக் கொண்டுவருதற்குத் தாமே போதுமென்றெண்ணினபோதிலும் ஐரோப்பிய தேசத்தார் இலகுவில் இவர்களை விடுவதாயில்லை. அவர்கள் ஜப்பான்தேசத்தில் பிரவேசித்து வர்த்தகம் முதலான சம்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ள அடிக்கடி பலவாறு பிரயத்தனப்பட்டுவந்தனர். இவ்வாறு பிரயத்தனப்பட்டவருள் முக்கியமானவர் உருஷியர். இவர்கள் ஜப்பானியர்க்கு அதிசமீபித்தவரும் தம் தேசமும் அவர்தேசமும் ஒன்றோடொன்று தொடர்ச்சியாயிருக்கப்பெற்றவருமாதலின் மற்றவர்களிலும் அதிகமாக விடாது முயன்று வந்தனர். கடைசியில் இந்த உருஷியர்களுடைய உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் அவர்கள் கப்பற்றலைவனாகிய காலேர்டின் என்பவனை 1811-ம் வருஷத்தில் ஜப்பானியர் பிடித்துச்சிறையிலடைத்துவைக்க அதனுடன் அவர்களுடைய அலட்டுத்தீர்ந்தது.

அயனரியின் மகனாகிய ஐயோஷி யென்பவன் மேலேகூறியபடி 1837-ம் வருஷத்தில் அரசாளத்தொடங்கினான். அதாவது நமது காலம்சென்ற விக்டோரியா மகாராணியார் சிங்காசனம் ஏறின காலமேயாகிறது. இவன் 1853-ம் வருஷம் வரையில் ஷோகன் ஸ்தானத்தில் இருந்து அரசுசெலுத்திவந்தனன். இவன்காலத்தில் விசேஷமாக ஒரு செய்தியும் நிகழாமற்போயினும் ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் ஜப்பானியரோடு வர்த்தகம் ஏற்படுத்தும்பொருட்டு அடிக்கடி வெகுவாக முயன்றுவந்தனர். அங்கிலேயர் மூன்றுதரம் பிரயத்தனப்பட்டார்கள். உலாந்தரும் முன்னிலும் தங்களுக்கு மேலான வர்த்தக உரிமைகள்கிடைக்கவேண்டுமென்று மன்றாடிக்கேட்டுக்கொண்டனர். ஷோகன் எல்லாருக்கும் ஏதோ சில சாக்குப்போக்குக்களைச்சொல்லி அவர்களுக்கு இடங்கொடாமல் சமாளித்துவந்தபோதிலும் உள்ளூற அவனுக்கு இவ்வைரோப்பியர்கள் அதுகாறும் போலன்றிப்படைக்கலங்களோடு யுத்தசன்னாகம்கொண்டுவந்து தம் இச்சையை நிறைவேற்றிக்கொள்ளவரின் என்னசெய்வ

து? எவ்வாறு அவர்களை வெல்வது? என்கிறதிகில் இருந்துகொண்டே வந்தது. இராச்சியத்தைப்பகைவர் கொள்ளாமல் காப்பாற்றுதற்கு வேண்டிய சாதனங்கள் ஒன்றும் தங்களுக்கில்லையென்பதை அவன் உணர்ந்திருத்தல்வேண்டும். அக்காலத்தில் ஜப்பானியர்களுள் அநேகசாமர்த்தியமுள்ள தலைவர்களுச்கும் சௌரியமுள்ள பொருநருக்கும், ராஜபக்தியும் தேசாபிமானமுமுள்ள பிரஜைகளுக்கும் குறைவில்லை. ஆயினும் நவீனரீதியாகக்கட்டப்பட்ட படைக்கப்பல்களாவது, பீரங்கிகளுக்குப்பெலன் அழியாத கோட்டைகளாவது, குறிதவறுமல் பாய்ந்து கொல்லத்தக்க ஆயுதங்களாவது, நெடுந்தூரம் செல்லத்தக்க துப்பாக்கிகளாவது இன்னும் தற்காலயுத்தத்துக்கேற்ற கவசங்களாவது உடைகளாவது அவர்களுக்குள் ஒன்றும இருந்ததில்லை.

ஐயோஷி யென்னும் ஷோகன் மரணமடைந்தபின் அவன் மகனுகிய ஐசேதா வென்பவன் பட்டத்துக்குவந்தான். இவன்காலத்தில் ஷோகனுக்கு இருந்த அதிகாரமும் கௌரவமும் முன்னிலும் குறைந்துபோயின. சக்கரவர்த்திகள் துரைத்தனகாரியங்களில் முயற்சி யெடுத்துக்கொள்ளாமல் சிற்றின்பப்பிரியராய் இருந்ததனுலும் ஷோகர்கள் பலவான்களாயும் வீரதீரபராக்கிரமமுடையவராயும் இருந்து காரியாகாரியங்களைக்கவனித்துச் சிறக்கப்பரிபாலனம்செய்து வந்ததனுலும் அந்த ஷோகர்களுக்கு அதிகாரம் சென்றுவந்தது. இப்போது ஷோகர்கள் தங்கள் சக்கிரவர்த்திகளைப்போலவே தாமும் சௌரியமிழந்து தம்மதிகாரத்தைப் பிறருக்கு ஒப்பித்துவந்ததனுல் ஜப்பானியத்தலைவர்களில் அநேகர் குடிகளுக்கும் சக்கரவர்த்திக்கும் நடுவே இந்த ஷோகர் என்பவர் யாதுக்கு? அநாவசியம் என்றெண்ணி அந்த ஷோகர்களைப் புறக்கணிக்க ஆரம்பித்தனர்.

௬-ம் அதிகாரம்.

ஷோகர் துரைத்தனத்தின் முடிவு 1853–1868.

ஐயோஷியின் மகனுகிய ஐசேதா என்பவன் 1853-ம் வருஷத்தில் ஷோகன் பட்டத்துக்குவந்து நான்கு வருஷகாலம் அரசுசெலுத்திவந்தான். இவன்காலத்தில் அதற்குமுன் சென்ற இருநூறு

வருஷங்களாக இவன் முன்னோர்களால் அவலம்பித்துவந்த பத்ததி முழுதும் மாறிப்போயிற்று. அதனால் ஜனங்களுக்குள் அதிர்ப்தியுண்டாகி ஷோகன் என்னும் ஸ்தானமே முடிவில் தள்ளப்பட்டுச் சக்கிரவர்த்தியே அரசாட்சியை ஒப்புக்கொண்டு நேரே நடத்துவான் ஆயினான். இந்த மாற்றம் உண்டாதற்குக்காரணத்தை இனிமேல் விவரிப்போம்.

ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும்ஜப்பானோடுவர்த்தகச் சம்பந்தங்கள் வைத்துக்கொள்ளும்பொருட்டு நெடுநாளாகப்பிரயத்தனம்செய்துவந்தார்களென்று இதற்கு முன்னமே கூறியிருக்கின்றோமல்லவா. 1853-ம் வருஷத்தில் கமடோர் பெறியென்னும் கப்பற்றலைவர் அமெரிக்கா துரைத்தனத்தாரால் அனுப்பப்பட்டு நான்குபடைக்கப்பல்களோடு யெடோவுக்கடுத்த துறையில் வந்திறங்கினர். இது கண்டதும் ஜப்பானியர்கள் புலிவருகிறது புலிவருகிறது என்று பலமுறை சொல்லக்கேட்டும் செவிகொடாமல் பராமுகமாயிருந்து பின் புலி பிரத்தியக்ஷமாகவே வந்தபோது ஆச்சரியப்பட்டு அமுங்கி வருந்தும் பேதையர்களைபோல அளவற்ற ஆச்சரியமும் பயமும் அடைந்தனர். ஜப்பானியர் அவ்வமெரிக்கர்களை ஏமாற்றித்தப்பிக்கொள்ள எத்தனைமுயன்றும் பயன்படாமல்முடிவில் அமெரிக்கதுரைத்தனத்தாரால் அனுப்பப்பட்ட நிருபத்தைப்பெற்றுக்கொண்டு அதற்குத்தக்க மறுமொழி சீக்கிரத்தில் அளிக்க உடன்படவேண்டியதாயிற்று. கமடோர் பெறியும் சீக்கிரம் திருப்பிவருவதாகச்சொல்லி விட்டு மீண்டுபோயினர்.

கமடோர் திரும்பினதும் ஷோகனும் மந்திரிகளுமாக ஆலோசித்து முன்னும் பின்னும் போதற்கு வழியில்லாமல் வருந்துகின்ற இருதலைக்கொள்ளியின் இடைப்பட்ட எறும்புபோல வருந்தினார்கள். அமெரிக்கர்களின் கருத்துக்கிணங்கி வர்த்தகஉடன்படிக்கைசெய்து கொடாவிடில் அவர்கள் போர்க்கெழுந்து தமக்கு ஊறுவிளைப்பது நிசசயம். அதற்கிணங்கும்பக்ஷத்தில் அயல் தேசத்தாரது சம்பர்க்கத்தை வெறுத்தலுற்ற ஜப்பானியர்களின் கோபத்துக்குப்பாத்திரர் ஆதலும் நிச்சயம். ஆதலின் அவர்கள் ஒன்றும் தோன்றாமல் முடிவில் டெய்மியோ வென்னும் தலைவர்களுக்கு இது விஷயமாகவொரு

கடிதம் எழுதி அவர்கள் அபிப்பிராயத்தைத்தெரிந்துகொள்ள நிச்சயித்தனர். அக்கடிதம் கண்டதும் அத்தலைவர்களில் அநேகர் அமெரிக்கர் விருப்பத்துக்கிணங்காமல் எதிர்த்தலே தகுதியென்றும் தமது நாட்டையும் அரசையும் காக்கத் தம் பொருளும் ஆவியும் தடையின்றிச் சமர்ப்பிப்போமென்றும் வீரவாதம் கூறினாராயினும் அவர்கள் பேச்சு பயனற்றதென்று ஷோகனும் மந்திரிகளும் நன்றாய் அறிந்திருந்தார்கள்.

இவ்வாறு இவர்கள் குழம்பிக்கொண்டிருக்கையில் கமடோர் பெறி தான் கூறிப்போனபடியே திரும்பிவந்துவிட்டான். இப்போது முன்போலன்றி பத்துப்படைக்கப்பல்களுடன் வந்தனன். ஆதலின் ஷோகன் இனித்தப்பிக்கொள்ள வழியில்லையென்று கருதித் தன்னுடைய தேசத்தாருக்குத்தன்மேல் எவ்வளவு கோபமுண்டாயினும் உண்டாகுக. எதிரியின் பலத்தைப்பாராமல் தான் முரட்டுத்தனமாய் எதிர்ப்பது சரியன்றென்று எண்ணி அமெரிக்கருடைய இஷ்டப்படியே அவர்கள் வர்த்தகவிஷயமாய் வந்து போதற்கநுகூலமாக ஓர் உடன்படிக்கைசெய்துகொடுத்தனன். இதன்பின் இது போன்ற உடன்படிக்கைகள் இங்கிலாந்து, உருஷியா, ஹாலந்து என்னும் தேசத்தாரோடும் செய்யப்பட்டன. இவ்வுடன்படிக்கைகளால் ஒவ்வொரு தேசத்தாரும் இவ்விரண்டு துறைமுகங்களில் வந்திறங்க அநுமதிபெற்றுக்கொண்டார்கள். இவ்வாறு நாகசாகி, ஹகோடேட், யோகோஹாமா என்னும் மூன்று துறைமுகங்களும் திறந்துவிடப்பட்டன,

இதனால் ஷோகன் கருதியவாறே ஜப்பானியர்களுக்குத் துரைத்தனத்தாரோடு மிக்க சீற்றமுண்டாகிக் குடிகள் இரண்டுபிரிவாயினர். ஒருவகுப்பார் துரைத்தனத்தார் செய்கையை அங்கீகரித்து அயல்தேச வியாபாரத்துக்குச் சம்மதித்தவர்கள். மற்றொருவகுப்பார் அச்செய்கையை முற்றும் வெறுத்து அவ்வயல் தேசவர்த்தகத்துக்கெதிரிடையாய் நின்றவர்கள். இவ்விருவகுப்பில் பின்னையவகுப்பு மிகவும் பலமானது. இவர்கள் இவ்வாறு கலகித்துக்கொண்டிருக்கையில் அமெரிக்கர் முதலானவர்கள் தாம் அதுவரையிற் பெற்ற உரிமைகள் போதாவென்றும் இன்னும் தங்கள் வர்த்தகம் தடையின்றி நிகழ்ந்து

வருதற்குச் சாதகமாக வேறு சில உரிமைகளும் வேண்டுமென்றும் போராடி முடிவில் தங்கள் இஷ்டப்படியே அனைத்தையும் பெற்றுக் கொள்வாராயினர். இதனால், ஏற்கனவே ஜப்பானியர்களுக்குள் புகைந்துகொண்டிருந்த அதிர்ப்தியென்னும் நெருப்பு நெய்விடுத்து மூட்டப்பட்டதுபோலச் சுவாலித்து ஓங்கத்தலைப்பட்டது.

(இன்னும் வரும்.)

S. MUTHU IYER,

"பூர்வீக இந்து மன்னர்களின் சுற்றுப் பிரயாணங்கள்"

மாக்ஷிமைதங்கிய வேல்ஸ் இளவரசரும் அவர் மனைவியாரும் இந்தியாவுக்கு விஜயஞ் செய்வதாகச் சமாசாரம் எட்டியிருக்கிறபடியால் இச்சமயத்திற்கிசைய பூர்வ காலத்தில் இந்தியாவில் நடந்தேறிய சில கவனிக்கத்தகுந்த விஷயங்களைச் சுருக்கமாய் எடுத்துரைப்பது அனைவருக்கும் அத்தியந்த களிப்பை உண்டாக்கலாம். பூர்விக இந்து மன்னர்கள் அரசாட்சிக்குரிய காரியங்கள் முழுவதையும் பிரம்ம குலத்திற்றோன்றிய தமது அமைச்சர்கள் வசத்தில் ஒப்புவித்திருந்தார்களேயன்றி தங்கள் ராஜ்ஜியத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து குடிகளின் உண்மையான நிலைமையை நேரில் விசாரித்தறிந்து கொள்வதில் பிரயாசை எடுத்துக் கொண்டதாகத் தோற்றவில்லை.* "இராஜ திருஷ்டி பட்டால் கெடுதி விளையும்" என்ற மூட நம்பிக்கை இன்னும் இருந்துகொண்டே வருகிறது. ஆனால் இந்த நம்பிக்கை—இராஜாக்கள் சுற்றுப்பிரயாணம் செய்து தங்கள் ஆளுகையின் மதிப்பை அக்குடிகளால் நேரில் அறிந்துகொள்ள அவகாசம் ஏற்பட்டால் தங்கள் திறமைக்குறைவு ஏற்படலாம் என்ற பீதியால் மந்திரிகள் உண்டாக்கிய ஓர் கற்பனையே ஒழிய வேறன்று என்பது புல்லறிவுள்ளோர்க்கும், சற்றுயோசிக்குங்கால் தெள்ளெனத் தெரிந்த விஷயமாய் ஏற்படும் வனவேட்டையாடல், ராஜசூய யாகத்திற்கு

* [நகர்சோதனைசெய்தும் ஒற்றர்கள் மூலமாயும் குடிகளின் குறைவை யறிந்தே நீதிசெலுத்தி வந்தனர். ப—ர்.]

முந்தி திக்விஜயம் செய்தல், ஆகிய இவ்விரண்டுவிதச் சுற்றுப் பிரயாணங்களையே பூர்விக இந்து மன்னர்கள் சாதாரணமாய் அனுசரித்து வந்ததாகக் காண்கிறோம். இவற்றுள் முற்கூறியதில் மன்னர்கள் மிகக் குறைவான பரிவாரங்களுடன் பிரயாணம் போவதினால் கீழ்நாட்டு மன்னர்கள் செய்த சுற்றுப் பிரயாணத்தின் ஆடம்பரத்தைப் பற்றியும், நிலைமையைப்பற்றியும் அவ்வளவு தெளிவாய் அறிவதற்கு இடமில்லாதிருந்தது. பிற்கூறிய திக்விஜயமோ ஒரு மன்னன் தனக்குட்பட்ட சிற்றரசர்கள் அனைவரையும் ஜயித்து அவர்கள் தன் அதிகாரத்தையும் வல்லமையையும் ஒப்புக்கொண்டு தன்னை ஏகசக்கராதிபதியாகப் பூஜிப்பதற்கு அடையாளமாய் தான் இயற்றும் ராஜசூயமென்னும் ஓர் மகத்தான யாகத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன் அச்சிற்றரசர்களின் நாடுகளில் ஜயகோஷத்துடன் செய்யும் சுற்றுப் பிரயாணமேயாம். புராணத்தில் கூறியபடி திக்விஜயம் செய்த மன்னர்களுள் கீர்த்திபெற்றவர்கள் ஸ்ரீராமரின் மூதாதைகளான மாந்தாதா ரகு என்பவர்களும், பாண்டுவும் அவன் சுதன் அருச்சுனனும் ஆவர். இவர்களில் கடைசியாகக் கூறப்பட்டவன் சீனதேசத்திற்கு திக்விஜயம் செய்து தேவலோகம் எனத்தகும் அத்தேசத்தைத் தன் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. சீதாப்பிராட்டி, துரோபதை, தமயந்தி, இந்துமதி, முதலாய இராஜகன்னிகைகளால் ஏற்படுத்தப்பட்ட சுயம்வரங்களுக்கு இந்து அரசர்கள் பிரயாணப்பட்டுப் போனதையும் காவியத்தில் நாம் வாசிக்கின்றோம். பூர்வீக இந்து அரசர்கள் யாத்திரைக்காகச் சுற்றுப் பிரயாணங்கள் செய்வதற்கு மனமற்றவர்களாயும் சோம்பலடைந்தவர்களாயுமிருந்தனர். தஞ்சைமாநகரை ஆண்ட ஓர் அரசன் தன் ஊரைவிட்டு வெளித்தேசங்களுக்கு யாத்திரை செய்யச் சற்றும் மனமில்லாதவனாயிருக்க, தன் மந்திரிமார்கள் அவ்வித யாத்திரையினால் வரும் நன்மைகள் பலவுளவென்று வற்புறுத்தியதைக் கேட்டு மிக்க வருத்தத்துடன் கடைசியாக காசியாத்திரை போவதாகத் தீர்மானித்துத் தன் அரண்மனையின் மாடியை விட்டிறங்கி முதல் வாயில்படியண்டை வந்ததும் இன்னும் காசிமாநகரம் எவ்வளவு தூரம் இருக்கிறதென்று தன் அமைச்சர்களைக் கேட்டதாக ஓர் வேடிக்கையான கதை சொல்லப்பட்டிருக்கிறது.

பூர்வீக இந்து மன்னர்கள் செய்த மிகப் பிரசித்தி பெற்ற சுற்றுப்பிரயாணங்களைப்பற்றி இராமாயணத்தில் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்ரீராமர் பதினான்கு வருஷகாலம் வனவாசஞ் செய்ய அனுப்பப்பட்ட சந்தர்ப்பம் இன்னதென்பதை இந்துதேசத்துக் கலைக்ஞானத்தில் சிறிது பரிச்சயமுள்ள எவரும் எளிதில் அறிவார். அயோத்தியின் சிங்காதனத்திற்கு நியாயமான பாத்தியதையை வகித்த ஸ்ரீராமனுக்குப் பட்டங் கட்டுவிப்பதில் விகாதமாக நின்ற கைகேயி அன்னவனை வனத்திற்கு அனுப்பி அவன் தம்பியும் தனக்குப் புதல்வனுமாகிய பரதனை அவ்வயோத்தியின் அரசாட்சி வகிக்கச் செய்தனள். அப்பரதன் வனத்திற்கேகின தன் சகோதரனான ஸ்ரீராமனை அயோத்திக்கு மீட்டுவரவும் அவனையே மீளவும் அரசுபுரியும்படி செய்யவும் தீர்மானித்தான். இவ்வெண்ணத்தை முடிக்கக் கருதிய பரதன் தான் பிரயாசமின்றிச் செல்வதற்கு வனத்தின் இடையே நல்லமார்க்கத்தைச் செப்பனிட ஏவலாட் படையொன்றை முன்னரே அனுப்பினான். அப்படையில் சிறந்த கூடாரங்களை அடிப்பதில் சமர்த்தரும், ஒட்டர்களும், வாய்க்கால் வெட்டிகளும், சிறந்த சிற்பிகளும், உண்டி சமைப்போரும் பாதைகளில் யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் பாதுகாப்பதற்கான வீரர்களும் இருந்தனர். ஓர் அழகான ராஜபாதை அதிதீவரமாய் உண்டாக்கப்பட்டது. மேடுபள்ளங்கள் சமமாக்கப்பட்டன. மணற்பாங்கான இடங்களில், நிழல் தரும் மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டன. அவசியமான இடங்களில் பாலங்கள் கட்டப்பட்டன. கூபம் தடாகங்கள் வெட்டப்பட்டன. பரதன் புறப்பட்டுப்போகத் தீர்மானித்திருந்த சுதினத்திற்கு முந்தினநாள் இரவில் பலசடங்குகள் செய்யப்பட்டன. கவிஞர்களும் சங்கீத சாகித்தியர்களும் தன்னயம் பாராட்டாத் தன்மையுள்ள அரசகுமாரனைப்புகழ்ந்து பாடினார்கள். மறுநாட்காலையில் அவ்வரசகுமாரன் தன் சபையைக் கூட்டுவித்து அச்சபையோர் அறிய அயோத்தியின் பட்டத்துக்குரிய ஸ்ரீராமனை மீட்டு வருவதாக வாக்குத்தத்தஞ் செய்து அங்கு வந்திருந்த பிரபுக்களிடமும் மற்றுமுள்ள மகான்களிடமும் விடைபெற்றுச் செல்வானாயினன். சேனைத்தலைவர்களும், தன்னைச் சார்ந்தவர்களும் தன்னோடு கூடச் செல்லும்படி பரதன் ஆக்ஞாபிக்கவே அவர்களும் பிரயாணப்

பட்டார்கள். முன்னணியில் வேதியர் வேதாத்தியயனம் செய்து கொண்டும், மந்திரிமார்கள் இந்த முயற்சி ஜயமாய் முடியும்பொருட்டு ஆசீர்வதிக்கும்படி கடவுளை வேண்டிக்கொண்டும் புறப்பட்டார்கள். இரத கஜ துரகபதாதிகள் அடங்கிய சதுரங்க சேனைகளும் பின்பற்றின. அயோத்திமாநகர் வாசிகள் தங்கள் அரசனது நற்குணத்தைக் கொண்டாடி மனச்சந்தோஷத்தினால் ஒருவரை யொருவர் அடிக்கடி தழுவிக்கொண்டு பின்னணியில் செல்வாராயினர். அக்கூட்டத்தில் பலவர்ணத்தார்களும், தொழிலாளிகளும் இருந்தனர். அனைவரும் சிரிங்கபேர புரத்தினருகே ஓடும் கங்காநதியைத் தாண்டி, பிரயாகை அல்லது அலகபாத்தினருகேயுள்ள விசித்திர வனங்களின் வழியே சென்று, முன்னரே அனுப்பியிருந்த வேவுகாரர்களால் சித்திரகூடத்தில் ஸ்ரீராமன் சீதாப்பிராட்டி இலட்சுமணன் இவர்கள் தங்கியிருப்பதைத் தெரிந்து, அச்சித்திரகூட பர்வதத்தை யணுகவே, சகோதரர்களிருவரும் சந்தித்தார்கள். இச்சந்திப்பை இவ்வளவு சாதுரியமாக வர்ணித்த வால்மீகருக்குச் சமானமானவர் வடமொழி கிரந்த கர்த்தாக்களில் எவரும் இலர். பிதுர்வாக்கிய பரிபாலனம் செய்யும் நிமித்தம் ஸ்ரீராமர் பரதன் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. பரதனும் அவன் பெருஞ்சேனைகளும், விசனத்துடன் அயோத்திக்குத் திரும்பினர். ஸ்ரீராமர் திரும்பி வரும் வரைக்கும், அஃதாவது பதினான்குஆண்டுவரையிலும், அயோத்திமாநகரம் லட்சுமீகரமாய் விளங்கவில்லை. சந்தோஷமும் சங்கீதமும் எம்மனையிலும் கிடையா. ஸ்திரீகள் மலர்களை அணிந்திலர். பண்டிகை நாட்களிலும் ஜனங்கள் தம் இல்லங்களை அலங்கரித்திலர்.

ஸ்ரீராமர் அரக்கனை மடித்து இலங்கையை ஜயித்து அயோத்தி திரும்பிவந்த சந்தர்ப்பமானது மிக விஸ்தாரமாயும் அலங்காரமாயும் வர்ணிக்க வால்மீகருக்கு மற்றோர் சமயம் ஏற்பட்டது. வால்மீகி சொல்லுகிற படிக்கு ஜயசீலரான ஸ்ரீராமரை அயோத்திக்கு இட்டுப்போக, வாசவன் தன் புஷ்பகவிமானத்தை உதவினன். அவ்விமானம் செல்லும் வழியில் நின்ற விருக்ஷஜாதிகளும், ஸ்ரீராமபிரான் வெற்றியடைந்து திரும்பிவருதலாகிய இச்சந்தோஷத்தை விளக்கிக் காட்டும் பாவனையாய் தளிர்களாலும் வாசனை மிகுந்த மலர்களாலும்

நிறைந்து நின்றன. அயோத்திக்குச் செல்லும் பாதையின் இருபக்கங்களும் சுமார் மூன்று யோஜனை வரைக்கும் தேனையும் அமுதையும் பொழிகின்ற மரங்களும் செடிகளும் அளமைக்கப் பெற்றிருந்தன. தன் மூத்தோன் அயோத்தியை நோக்கிவரும் செய்தியைக்கேட்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கி, தன் நகர வாசிகள் அனைவரும் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்து வாசனைபொருந்திய பூமாலைகளுடனும் நானாவித வாத்திய கோஷங்களுடனும் தங்கள் தங்கள் குல தெய்வங்களை ஆராதிக்கும்படியாயும், கவிஞர்களும் புகழ்வோர்களும், சங்கித சாகித்தியர்களும் வேசியர்களும், மந்திரிகளும், யுத்தவீரர்கள் தங்கள் மனைவியர்களுடனும், பிரம்ம--க்ஷத்திரிய—வைசிய—சூத்திரர் என்ற நான்கு வர்ணத்தார்களும் ஸ்ரீராமனை தரிசிக்கப் பிரயாணப்படும்படியாகவும் பறை யறைவிக்கும்படியாய், தன் இளைய சகோதரனை சத்துருக்கனுக்குக் கட்டளையிட்டனன். இது காறும் விசனத்தில் ஆழ்ந்திருந்த அந்நகரம் இமைப்பொழுதில் விசித்திர அலங்காரமாயும், அழகுள்ளதாயும், விளங்கிற்று. ராஜபாதைகளும் குறுக்குப் பாதைகளும் சுத்திகரிக்கப்பட்டும், புஷ்பங்களும் நெற்பொறிகளும் தூவப்பட்டும் கொடிகள் உயர்த்தப்பட்டும், தங்கத்தினாலும் வெள்ளியினாலும் அமைத்த புஷ்பத் தோரணங்கள் இல்லந்தோறும் கட்டப்பட்டும் இருந்தன. சச்சரவு கலகமின்றிப்பாதுகாப்பதற்காக பாராச் சேவகர்கள் நியமிக்கப்பட்டார்கள். சுபலக்கினத்தில் ஸ்ரீராமர் பட்டினப் பிரவேசம் பண்ணுவதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டதுமன்றி, மங்கள வாத்தியத்துடன் எதிர் கொண்டழைத்துவா மெய்க்காவலர்களும் அனுப்பப் பட்டார்கள். வானர சேனைக்கு முன்னால் 9000 கஜங்களும் பத்தாயிரம் எண்கொண்ட நகரவாசிகள் வீணைமுதலிய வாத்தியங்களை வாசித்துக்கொண்டும், சந்தோஷத்தினால் கரகோஷம் செய்துகொண்டும் சென்றார்கள். அப்பவனிக்கு முன்னர் ஆசீர்வாதம் செய்வதற்கு தங்கள் கரங்களில் சுவர்ண புஷ்ப அக்ஷதையுடன் பிராமணர்களும் பசுக்கூட்டங்களும் நாட்டிய மாதர்களும் சென்றார்கள்.

(இன்னும் வரும்)

பல்லடம்,
18—10—05.

M. ராகவேந்திராச்சார்
ஸ்கூல் உபாத்தியாயர்
பல்லடம்.

மனிதனது எழுகூறு.

பரதரிசனம் இருவிதங்களாக அடையலாம். இஷ்டம்போல் வேண்டும்பொழுது நினைவையும் ஊன்பொதிந்த இந்தச்சரீரத்தில் சகல இந்திரியங்களும் இயல்பாகவே தன்னிச்சையாகவே புலனைத் தாக்காமல் செய்துகொண்டிருக்கும் சேஷ்டைகளையும் புழுக்கள் என்றுசொல்லும்படியான கண்ணறைகளின் சுபாவ இயக்கங்களையும் திமிர்த்துப்போனதுபோல் அடக்கிவிடுவது ஒருவழியாம். ஆத்துமாவினுடைய சுயப்பிரகாசமானது நான் என அகங்கரித்துக்கொண்டிருக்கும் ஜீவனுடைய காமாதிகோரங்களைத் தகித்து மறுபடியும் எப்பொழுதும் எழுந்திராவண்ணம் அடக்கிவிட்டால் இத்தொழில் வெகு சுலபமாய் முடியும். ஆனால் இது அதிவீரதீரனால்தான் முடியும். முன் ஜன்மத்தில் அதிக சுத்தமான வாழ்க்கை வாழ்ந்து சரியான வழியிற்சென்று முயன்று சாதகஞ்செய்து மெஞ்ஞான யோகிகளின் நிலையாகிய பரிபூரண பக்தியையும் மனத்தூய்மையையும் ஏறக்குறைய அடைந்து இருத்துவிட்ட குறையுடன் இச்சென்மத்தில் வந்தவனும் பரதரிசனம் அடைவான். இஃது இரண்டாவது விதமாம். பரமரகசியமான தரிசனங்களில் உயர்தரமனசின் தலத்தை எட்டக்கூடிய வழி மூன்றாவதும் ஒன்றுண்டு. ஆனால் இஃதுஎப்போதும் நிலைத்திராமல் அப்போதைக்கப்போது தோன்றுவதாம். மேலும் இஃது இத்தரிசனங்காணும் புருஷனுடைய இஷ்டத்திலும் சங்கற்பத்திலும் சுவாதீனத்திலும் பொறுத்தன்று. ஆனால் வியாதியினாலும் துன்பம் அனுபவித்துப் பதைப்பதைப்பதாலும் தேகபலம் குன்றி தேகம் அதிகமாய் மெலிந்து சோர்ந்து தளர்ந்து இருப்பதைப்பொறுத்திருக்கின்றது.

இப்பொழுது இதுவரை சொல்லிவந்ததினால் உயர்தரமனசின் செயல்களுக்கும் அதன் கதிராகிய கீழ்த்தர மனசின் செயல்களுக்கும் உள்ள வித்தியாசம் நன்குவிளங்கும். நியாய சோதனைசெய்து தர்க்கித்து யூகித்தறிதல் இன்றி நேரில் முகஸ்தமாய்ப்பார்க்கும் அற்புத மேதை, தெய்வப்புலமை, வரப்பிரசாதம் என்பதெல்லாம் உயர்தரமனசைச்சார்ந்தது. ஓதாதுணருந்தன்மை தெய்வப்புலமையின் இலக்ஷணங்களில் ஒன்று. கீழ்த்தரமனசானது மூளையாகிய கருவியின்

மூலமாய்த் தொழில்செய்து உணருஞ்செயலுக்கு யூகம் என்று பெயர். பிரபஞ்சத்தின் காரியங்களைக்கவனித்துப்பார்த்து அவைகளை ஒழுங்குபடுத்திப் பரித்துப்பார்த்து ஒன்றுடன் ஒன்றுடன் ஒத்து சீர்தூக்கி நிறைபார்த்துத் தர்க்கித்துச்சித்தாந்தஞ் செய்யும்படியான குணத்திற்குத்தான் யூகம் என்று பெயர். தர்க்கசாஸ்திரத்தில் சொல்லும் இருவழிகளில் ஒருவிதமான அனுமானம் என்றும் சொல்லும்வழியினால் தெரிந்தவற்றினின்றும் தெரியாததிற்கு மேலேறிச் சென்று ஒரு கற்பனையை முடிவுகட்டுவதும் அனுமிதம் என்னும் வழியால் மறுபடியும் தெரிந்தவற்றிற்கு இறங்கி முடிவுகட்டின கற்பனையை நூதனமான சோதனையினால் நிரூபித்தலும் யூகஞ்செய்கின்றது.

அற்புதமேதையென்பது உட்பார்வையே. ஊனக்கண்ணின் பார்வைச்சக்தி எவ்வளவுநேராகவும் துரிதமாகவும் தொழில்செய்து காண்கின்றதோ அவ்வளவு நேராகவும் துரிதமாகவும் அற்புதமேதையும் உட்பார்வையினால் காண்கின்றது. அறிவின் கண்களையுபயோகித்தல் அதாவது மனோதலத்தில் தரிசனைக்குத்தோன்றும் உண்மையை உடனே பிசகின்றி உணர்தல்தான் அற்புதமேதை. அற்புதமேதை திடமாயும் உறுதியாயும் பார்க்கின்றது. அதன்பார்வை மப்பு மந்தாரமின்றியிருக்கின்றது. அஃது அறிவிக்குஞ்செய்தி சற்றும் பிசகுவதேயில்லை. அது யூகத்துக்கு அதீதப்பட்டதும் மேலானதுமாதலால் அஃது அறியும்உண்மையின் நிச்சயத்திற்கு ஒரு அத்தாக்ஷியும் வேண்டியதில்லை. யாதொரு அத்தாக்ஷியும் அதன்அறிவை யதிகப்படுத்தமாட்டாது. கல்விப்பயிற்சி முதலானவைகளால் வாராமல் எல்லா மனிதர்களுக்கும் சாதாரணமாயிருக்கும் உணர்ச்சி அல்லது அறிவுக்கு சகசஞானம் என்றும் சகச அறிவு என்றும் உபஞ்ஞையென்றும் சகஞ்ஞையென்றும் பெயர். ஆசாபாசங்களாலும் காமாதிகோரங்களாலும் மங்கிக் கலங்கிக் கிடக்கும் நமது உபஞ்ஞைகளை அடிக்கடி தப்பிதமாய் அருள் விளக்கமாகிய உண்மை ஞானங்கள் என்றும் சொல்லுகிறார்கள். கேவலம் காமவேகத்தை உயர்தரமனசின் உன்னதமான வாக்கென்றும் அங்கீகரிக்கின்றார்கள். அந்த உயர்தர மனசின் வாக்கை அந்த வாக்குத்தான்என்று உணர வெகுநாள் அப்பியாசம் வேண்டும். ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம். அகங்கார

மாகிய நீர்ச்சுழியில் நாம் அகப்பட்டுக்கொண்டும் பசிதாபங்களும் அவாக்களும் ஆசை கருமமாகிய புயற்காற்று நம்மைச்சுற்றியும் பேரிரைச்சலோடு முழங்கி அடித்துக்கொண்டும் மனோசலனங்கள் என்னும் அலைகள் நம்மை முன்னும் பின்னுமாக உந்தியெறிந்துகொண்டும் இருக்கும் வரை உயர்தரமனசின் ஒலி நமது செவிக்கெட்டாது. தீ யெரியும் தாபத்திலும் சுழற்காற்றிலும் இடிமுழக்கத்திலும் புயற்காற்றிலும் அன்று உயர்தரமனசின் கட்டளை வருவது. மௌன நிலை வாய்ந்து சாந்தம் பெற்று மண்ணுலக வாசனை சற்றுந்தாக்காமல் இருக்கும் பொழுதுதான் ஆத்துமாவின் சத்தம் சத்திக்கும்.

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

மனிதனும் அவன் உடல்களும்.

* தடித்த உடல்:—இந்த உடலையெடுத்து ஆண்டு அதைப்புனிதப்படுத்திப் பயிற்றுவது எவ்விதம் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டி நாம் யாக்கையைப் பற்றி விசாரிக்கப்புகுந்து அவ்விசாரணையில் போதுமான வரை நீடித்துத் தாமதித்து நின்று நிதானிக்க வேண்டும். நமது oசங்கற்ப சித்தத்தின் ஆளுகைக்குப் புறம்பாய்ப் பெரும்பான்மையும் நின்று நடக்கும் eஅங்க இயக்கங்களின் பகுதியையும் அப்பால் அந்தச்சங்கற்ப சித்தத்தின் ஆட்சிக்குட்பட்டு நடக்கும் அங்க இயக்கங்களின் பகுதியையும் அற்பம்கருதி விசாரித்தல் வேண்டும். இவ்விருவித அங்க இயக்கங்களும் உடலிலுள்ள a நரம்பு மண்டலங்களின் மூலமாய் நடக்கின்றன. ஆனால் இவ்விருவகை இயக்கங்களையும் வெவ்வேறு நரம்பு மண்டலங்கள் ஆளுகின்றன. உடல் பொதுவாய் உயிர்தரித்து நிற்பதற்கான

---

* அன்னமயகோசம் என்பது இஃதே.

o சங்கற்பசித்தம்—Will.

e அங்க இயக்கங்கள்—Bodily activities.

a நரம்புமண்டலங்கள்—Nervous Systems.

சாதாரண அங்க இயக்கங்களை யெல்லாம் ஒருவித நரபும் மண்டலம் செலுத்துகின்றது. இந்த நரம்பு மண்டலத்தினால் b புப்புசங்கள் என்றும் சொல்லப்பட்ட நுரையீரல்கள் சுருங்குகின்றன; இருதயம் என்னும் இரத்தாசயம் துடிக்கின்றது; ஜீரணகருவிகளின் இயக்கங்கள் நடக்கின்றன. இது சாதாரணமாய்ச் aசகவேதமண்டலம், சுகவேத நரம்பு மண்டலம், ஒற்றுணர்வு நரம்புமண்டலம், என்று பலவிதமாய்ச் சொல்லப்படும் b அனிச்சாநரம்புகள் சேர்ந்துள்ளது. உடல்கள் கட்டப்பட்டு வந்தகாலமாகிய ஸ்தூல பரிணமவிருத்தி நடந்தேறி வந்த மூந்தின நெடுங்காலத்தில் ஒரு காலம் இந்தச் சுகவேதமண்டலமானது இந்த மண்டலத்தையுடைய பிராணியின் வசத்துக்குட்பட்டிருந்தது. ஆனால் வரவர அது தானாகவே இயங்கி வேலை செய்ய ஆரம்பித்தது—அஃதாவது அது சங்கற்ப சித்தத்தினுடைய வசக்கட்டுக் குட்பட்டு நின்று இயங்கித் தொ

---

b புப்புசங்கள்—Lungs.
a சகவேதமண்டலம்—Sympathetic System.
b அனிச்சாநரம்புகள்—Involuntary nerves.

இவ்விடத்தில் நரம்பு மண்டலத்தைப் பற்றிச் சற்று விவரமாய்த் தெரிந்திருத்தல் அவசியம். நமது தேகத்தில் உண்டாகும் சகல இயக்கங்களுக்கும் தொழில்களுக்கும் நாம் உணரும் உணர்ச்சிகளுக்கும் கருவியாயிருப்பது நரம்பு மண்டலமாம். மூளையும், சிரநரம்புகளும், முள்ளந்தண்டுக்கொடியும் முள்ளந்தண்டு நரம்புகளும், சகவேத நரம்புகளுமாகிய இவைகளின் கூட்டம் நரம்பு மண்டலம் என்னப்படும். மூளை யென்பது தலையோட்டுக்குள்ளிருக்கும் குழைவான ஒரு உறுப்பாம். முள்ளந்தண்டுக்கொடி யென்பது முதுகெலும்புக்குள் மூளையிலிருந்து முள்ளந்தண்டு நெடுக ஓடும் கைவிரற்பருமனுள்ள மூளையைப்போல் வெண்மையான பதார்த்தமுள்ள ஒரு கொடியாம். இதற்குக் கண்டக்கோடி யென்றும் பெயருண்டு. இதன்மேல் தலையானது சிரவோட்டுக்குள் குமிழ் வடிவமாயிருக்கும். இந்தக் குமிழ் வடிவபாகத்திற்கு முருளம் என்று பெயர். மூளையையும் முள்ளந்தண்டுக் கொடியையும் பொதுவாக மேரு (axis) என்பார்கள். இவை இரண்டும் சேர்ந்து மூளைக்கண்டமேரு (Cerebro-spinal axis) என்பதாம். மூளையும் முள்ளந்தண்டுக்கொடியும் இவை யிரண்டிலும் சம்பந்தப்பட்ட நரம்புகளும் சேர்ந்து மூளைக்கண்ட மண்டலம் என்பதாம். நரம்புகள் என்பவை மூளையிலும் முள்ளந்தண்டுக்கொடியிலுமிருந்து செல்லும் உரத்த செல்லிய நூலிழை

ழில் நடத்துவதை விட்டு அது தானாகவே சுயேச்சையாய் இயங்கிக் கொண்டிருக்கும்படியான ஒருவித போலிச் சுயாதீனம் பெற்று யாக்கையானது பிராணனுடன் கூடி நிலை நிற்பதற்கான சாதாரண அங்க இயக்கங்களை யெல்லாம் செலுத்திக்கொண்டு வந்தது. வியாதியின்றித் தேகா ரோக்கியமுள்ள மனிதன் இந்த அங்க இயக்கங்களைக் கவனிப்பதேயில்லை. சுவாசம் தடைபடும் பொழுதாவது அல்லது

போன்ற வெண்மைக் கொடிகளாம். இவைகள் தேகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கொப்புக் கொப்பாக கூந்தல் விட்டுச் செல்லும். மேரு வென்பதைத் தவிர தேகத்தின் மற்ற எல்லாப் பாகத்தையும் சுற்றுப் புறம் அல்லது **பரிணுகம்** (Peoiphery) என்பார்கள். இந்த நரம்புகள் பரிணுகத்திலிருந்து மேருவுக்கு உணர்ச்சியைக் கொண்டுபோகின்ற **உணர்நரம்புகள்** (Sensory-nerves) என்றும் மேருவினின்றும் பரிணுகத்திற்குச் சலனத்தைக் கொண்டுபோகின்ற **சலனநரம்புகள்** அல்லது **இயக்கு நரம்புகள்** (Motor-nerves) என்றும் இருவகையாம். இந்த நரம்புகள் இச்சையின் வயத்தாய் தொழில் செய்வனவாதலால் **இச்சா நரம்புகள்** (Voluntary nerves) என்றும், இந்தமண்டலம் **இச்சாநரம்புமண்டலம்** (Voluntary nervous system) என்றும் பெயர் பெறும். இந்நரம்புமண்டலம் நமது பரிணுமவிருத்திக்கு முக்கியமானது. இதைத்தவிர வேறொரு நரம்புமண்டலம் **சகவேதனி** யென்றும், **சகவேதமண்டலம்** என்றும், **ஐக்கியமண்டலம்** என்றும், **ஒற்றுணர்வுமண்டலம்** என்றும் சொல்லும்படியானது உண்டு. இது சிரசிலிருந்து ஆசனம்வரை இரட்டைவரிசையாக முள்ளந்தண்டின் இருபுறத்திலும் மணிக்கோவைபோல் நீண்டுசென்று உடம்பிலுள்ள பிரதானஉறுப்புக்கள் எல்லாவற்றிற்கும் பரந்துபோவதுமல்லாமல் மூளையிலும் முள்ளந்தண்டுக்கொடியிலு மிருந்து கிளம்புகிற நரம்புகள் எல்லாவற்றோடும் பொருந்துகின்றது. இந்த நரம்புமண்டலத்தால் நமது இச்சையின்றியே நமது கவனத்தில் சாதாரணமாய்ப் படாமல் தேகம் உயிர் வாழ்ந்திருப்பதற்கான சாதாரணத்தொழில்கள் நடந்துக்கொண்டிருக்கும். சுவாசம் விடுவதற்கான சுவாசாசயங்கள் சுருங்கவும் விரியவுமாயிருப்பதும் தேகத்தில் இரத்தம் ஓடிக்கொண்டிருப்பதற்கு இருதயம் துடித்துக்கொண்டிருப்பதும் இரத்தக்குழல்கள் இயங்கிக்கொண்டிருப்பதும் ஜீரணகருவிகள் தொழிற்செய்வதும் இன்னும் இவைபோன்ற செயல்கள் தேகம் நிலைநிற்பதற்காகநடத்திக்கொண்டிருப்பது இந்தநரம்புமண்டலத்தினுற்றான். இச்சைவயத்ததல்லாததானபடியால் இந்த நரம்புக்கு **அனிச்சாநரம்புகள்** (Involuutary nerves) என்றுபெயர்.

ச்சு விடுவதற்குத் திணுக்கம் உண்டாகும் பொழுதாவதுதான் அவன் சுவாசம் விடுகிறதை அறிகின்றான்; இருதயத் துடிப்பு கடுங்கோபமாகவாவது அல்லது சீர் தப்பியாவது நடக்கும்பொழுது தான் அவன் தன்னுடைய இருதயம் துடித்துக்கொண்டிருக்கின்றதென்பதைத்தெரிகின்றான்; ஆனால் எல்லாக் காரியங்களும் ஒழுங்காகவே நடந்துகொண்டிருக்கும்பொழுது இந்தக் கிரியைகள் அவன் கவனத்தில் படாமலே நடந்துகொண்டிருக்கின்றன. ஆயினும் நெடுங்காலம் மன அப்பியாசம் செய்து வருவதால் இந்த ஐக்க நரம்பு மண்டலத்தை நமது சங்கற்ப சித்தத்தின் அதிகாரத்திற்குள் கொண்டுவரக் கூடும். இந்தியா தேசத்தில் ஒரு வகுப்பு யோகிகள்——ஹட யோகிகள் என்று இவர்களைச் சொல்லுவார்கள்——கீழ்த்தா மனோ சக்திகளையெழுப்புங் கருத்துடன் இந்தச்சகவேத மண்டலத்தைத் தம் வசத்தில் கொண்டுவரும் சக்தியைக் கண்டவர் அதிசயிக்கும்படியான அளவுக்குச் சித்தி செய்து கொள்கின்றார்கள். பரஞானம், குணம், ஒழுக்கம், புத்தி இவைகளின் விருத்தியைக் கொஞ்சமேனுங் கவனியாமலே ஸ்தூல சரீரத்தில் மட்டும் நேராகத் தொழில் செய்து இந்தக் கீழ்த்தர மனோ சக்திகளை வெளிப்படுத்திக் கொள்ளல் கூடும். ஹடயோகி யானவன் நெடுங் காலம் சுவாசபந்தனஞ்செய்துகொண்டு நிற்கும்படியாகத் தன் சுவாசத்தை வசப்படுத்தி நடத்தவும், தன் இச்சைப் பிரகாரம் இரத்த வோட்டம் விரைவாகவாவது அல்லது மெதுவாகவாவது செல்லும்படியாகத் தனது இருதயத்தின் துடிப்பைத் தனது வசத்தில் கொண்டுவரவும் இவ்வேதுக்களால் ஸ்தூல தேகத்தைப் பிரக்ஞை கெட்டு சுழுத்தியவஸ்தை யடையும்படி விட்டு அதற்குள் கட்டுப்பட்டிருக்கும் சூக்ஷ்ம சரீரங்களுள் ஒன்றாகிய * சசியுடலம் என்னும் மீனொளி சரீரம் விடுபட்டு நிற்கச் செய்யவுங் கற்கின்றான். இந்த அப்பியாச முறை விரும்பிப்பற்றத்தக்கதன்று; ஆயினும் சாதாரணமாய் ஸ்தூல சரீரத்தில் தானாகவே நடந்துகொண்டிருக்கும் இந்த அங்க இயக்கங்களை ஒரு மனிதன் எவ்வளவு தீர்க்கமாய்த் தன் வசத்திற்குக் கொண்டுவரக்கூடும் என்பதைத் தெரிந்து, ஸ்தூல தேகமாகிய சிறைச்சாலையினின்றும் விடுபட்டு வெளிவருவதற்காக ஆயிரக் கணக்காய்ச் சனங்கள் நெடுங் காலம் இவ்வரிய கஷ்

*இதன்விவரத்திற்கு 'மனிதனது எழுகூறு' என்னும் நூலைப்பார்க்கவும். தி. மீ

டமான சாதனத்தைச் சுமந்து வெற்றுப்பழகிவருகின்றார்கள் என்பதை உணர்ந்து, சரீரத்தின் உயிர்த்துடியாட்டம் அடங்கிநிற்கும்பொழுதும் இந்தஹடயோக அப்பியாசிகள் உயிருடனிருக்கின்றார்கள் என்பதையறிந்தும் இருப்பது. ஸ்தூல சரீரமே முக்கியமானது அதன் ஜீவாதார இயக்கங்கள் எல்லாம் கட்டாயமாய் நடந்தேறியே வரவேண்டும் அப்படியில்லையாகில் ஜீவன் நிற்காதுபோய் விடும்படியான இயல்புடையது இந்த ஸ்தூல சரீரமென்று கருதும் மனப்போக்குள்ள மேனாட்டு ஜனங்களுக்கு அறிவூட்டும். இந்த ஹடயோகிகள் குறைந்த பக்ஷம் ஊக்கமுள்ளவர்களே. அவர்கள் பஞ்சேந்திரியங்களின் வயத்தராய் அவைகளுக்கு இனி அடிமைப்பட்டவர்கள் அல்லர்.

இனி இதைவிட்டு மேற்போகலாம். நமக்கு இச்சாநரம்பு மண்டலம் ஒன்றும் இருக்கின்றது. இது நமதுமனத்தைச் சார்ந்த காரியங்களுக்குச் சகவேதமண்டலத்தைப் பார்க்கினும் அதிகமுக்கியமானது. இப்பெரிய நரம்பு மண்டலந்தான் நமது மனசின் கருவி. இந்த நரம்புமண்டலத்தினாற்றான் நாம் இந்த ஸ்தூலதலமாகிய பிருதிவி மண்டலத்தில் உணரவும் இயங்கவுமாயிருக்கின்றோம். இது மூளைக்கண்டமேரு வென்று சொல்லும்படியான மூளையும் முள்ளந்தண்டுக் கொடியும் சேர்ந்தது. இந்த மேருவினின்றும் நமது சரீரத்தின் ஒவ்வொருபாகத்திற்கு நரம்பு வஸ்துவாலாகிய மெல்லிழைகள் செல்லுகின்றன. இவ்விழைகளுக்கு நரம்புகள் என்று பெயர். இந்தநரம்புகள் உணர் நரம்புகள் எனவும் இயக்கு நரம்புகள் இருவகையாம். உணர் நரம்புகள் நாம்உணர்வதற்கு ஏதுவானவை. அவை பரிஞகத்திலிருந்து மேருவுக்கு ஓடுகின்றன. இயக்கு நரம்புகள் நாம் அசைவதற்கு ஏதுவானவை. இவை மேருவினின்றும் பரிஞகத்திற்கு ஓடுகின்றன. சரீரத்தின் ஒவ்வொருபாகத்தினின்றும் நரம்பிழைகள் ஓடுகின்றன. இந்த நரம்பிழைகள் ஒன்றோடொன்று சேர்ந்து கட்டுகள் ஆகின்றன, இக்கட்டுகள் சென்று முள்ளந்தண்டுக் கொடியைச் சேர்ந்து அதன் மேற்புறம்சூழ்ந்திருக்கும் நார்ப்பதார்த்தமாய் அப்பால் மேலோடிச் சங்கற்பசித்தத்தின் ஆட்சிக்குட்பட்டு நடக்கும் சகல உணர்ச்சிக்கும கருத்துடன் வேண்டுமெனச்செய்யும் சகல இயக்கத்திற்கும் மையஸ்தானமாயிருக்கும் மூளையில்

பர்டந்து மூடி கப்புவிடுகின்றன. மனிதன் தன்னுடைய சங்கற்ப சக்தியையும் அறிவையும் வெளியாக்குவதற்கான கருவிமூலம் இந்த நரம்பு மண்டலமேயாம். ஆகையால் அவனது சங்கற்பசக்தியும் அறிவும் மூளையில் நிலைத்துக் குடியிருப்பதாகச் சொல்லலாம். இந்த ஸ்தூலதலமாகிய பிருதிவி மண்டலத்தில் மூளைநரம்பு மண்டலம் இவைகள் மூலமாயன்றி மனிதன் ஒன்றும் செய்யவே முடியாது. மூளையும் நரம்பு மண்டலமும் சீர்தப்பி யிருந்தால் அவனுக்கும் தன்னுடைய எண்ணங்களையும் சக்திகளையும் சீராக வெளியாக்க முடியாது. மனோபவமும் மூளைச்சேட்டையும ஒத்தே திரிகின்றனவென்று லோகாயத மதம் என்னும் பௌதீகவாதம் தர்க்கித்து வாதிப்பதற்கு அஸ்திவாரமாகிய உண்மை இங்குத் தானே இருக்கின்றது. பௌதிகவாதி ஸ்தூலப் பிரபஞ்சமாத்திரத்தில் ஊடாடிக்கொண்டிருப்பது போலவே ஸ்தூலப்பிரபஞ்சமாத்திரத்தில்வியாபாரஞ்செய்யும்பொழுதுமனோபாவமும் மூளைச்சேட்டையும் உடனொத்தே வேறுபடுகின்றன. மனோபாவமானது நரம்பு மண்டலச் சேட்டையினாலுண்டாகுங் காரிய மல்லவென்று விளக்கிக் காட்டுவதற்கு ஸ்தூலதலத்தை விடவேறானதலமாகிய புவர் தலத்தினின்று சக்திகளை வசப்படுத்திக் கொண்டுவந்து உபயோகப்படுத்துவது அவசியம். மருந்துச் சரக்குகளினாலாவது வியாதியினாலாவது அல்லது காயம் முதலிய கெடுதியினாலாவது மூளையானது பேதித்து இயக்கப்பட்டால் அந்த மூளையையுடைய மனிதனது மனம் இந்த ஸ்தூலதலமாகிய பிருதவிதலத்தில் தகுமானபடிச் சீராக வெளித்தோன்றி விளையாடமுடியாது. உலோகாயதனாகிய பௌதீகவாதியும் சிலவியாதிகளினால் மனமும் ஒருதன்மையாகப் பேதித்து நடக்கும் என்பதை யெடுத்துக்காட்டுவான். வசனவிலோபனம் என்று அரிதாய் ஒரு வியாதியுண்டு. இந்தவியாதி செவிக்கருகில் மூளையின் தாதுவில் ஒரு குறிப்பான பாகத்தைக் கெடுத்து விடுகின்றது. அதனால் சொற்கள் பாத்தியப்படும் மட்டில் முழுஞாபகசூனியம் தொடர்ந்துண்டாகின்றது. இந்த்வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருமனிதனை நீ ஒரு கேள்விகேட்டால் உனக்குப் பதில் உத்தரம் சொல்ல அவனால் முடியாது; நீ அவன்பேரைக் கேட்டால் உனக்கு அவன் மறுமொழிசொல்ல மாட்டான்; ஆனால் அவன் பெயரை நீ உரித்ச்சதால் அவன் தன் நினைவில் அதுபட்டதாகக் காட்

டிக்கொள்ளுவான்; அவனுக்கு நீ யாதாமொரு சங்கதியை வாசித்தால் அந்த அபிப்பிராயம் தனக்குச் சம்மத முண்டென்பதையாவது அல்லது சம்மதமின்று என்பதையாவது அவன் குறிப்பாகக் காட்டுவான்; அவன் நினைக்கச் சக்தியுள்ளவனாயிருக்கின்றான்; ஆனால் பேசுவதற்குச் சக்தியற்றவனாயிருக்கின்றான். கெட்டுப்போயிருக்கும் மூளையின் பாகமானது ஸ்தூலத்தில் வார்த்தைகளை ஞாபகத்தில் கொண்டுவரும் சக்தியுடன் சம்பந்தபட்டிருப்பது போலும்; ஆகையால் மூளையின் அந்தக் குறியான பாகங்கெடவே மனிதனானவன் நினைக்கும் சக்தியை வைத்துக்கொண்டு அவனுக்கு மற்றொருவர் சொல்லும் விஷயத்தைக் கேட்டு அவ்விஷயம் தனக்குச் சம்மதம் அல்லது சம்மதமில்லை யெனத் தெரிவிக்கக் கூடியவனாயிருந்தும் இந்த ஸ்தூலதலத்தில் வார்த்தைகள் மட்டில் ஞாபகத்தை யிழந்து ஊமையனாய் நிற்கின்றான். மனிதன் தன் பழுதுபட்டிருக்கும் கருவியினின்று விடுபடும்பொழுது இயற்கையாகவே உலோகாயத நியாயம் உடனே உடைபட்டுப்போகின்றது; அப்பொழுது அம்மனிதன் தன்னுடைய சக்திகளை வெளிப்படப்பிரகாசிக்கும்படி செய்யத் திறமையுள்ளவனாயிருக்கின்றான். ஆயினும் மறுபடியும் ஸ்தூலத்தில் வெளித்தோன்றும்படி நேரிடும்பொழுது ஸ்தூலகருவி ஊனப்பட்டிருப்பதால் அவன்மறுபடியும் பங்க மடைகின்றான். நமது தற்காலவிசாரணையை நோக்க இதனுடைய விசேஷம் உலோகாயதபக்ஷம் ஸ்திரமா அல்லது ஸ்திரமில்லையா வென்றுபார்ப்பதில் இல்லை. ஆனால் மனிதன் ஸ்தூலதலத்தில் தன் சக்தியை வெளிப்படுத்திக் காண்பிப்பதில் அவனது ஸ்தூலக் கருவியின் தகுதியை யனுசரித்து வரையறுக்கப்பட்டிருக்கின்றான்; இந்தக் கருவியானது ஸ்தூலகாரியங்களுக்குக் கசியும் தன்மையது என்னும் உண்மையை விளக்கிக்காட்டுவதில் தான் இதனுடைய விசேஷமிருக்கின்றது. ஸ்தூல காரியங்கள் இக்கருவியைக் கெடுக்கக்கூடுமானால் ஸ்தூலகாரியங்களே அதை விருத்தி செய்யவும் கூடும். இந்தக்கருத்து நமக்குப் பிராணாதாரம் போன்ற அவ்வளவு முக்கியமானது என்று நாம் போகப் போகக் காண்போம்.

(இன்னும்வரும்.)

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

461

உ

சிவமயம்.

முத்தியுபாயம்.

———:o:———

பிறவிப்பிணிக்கு வித்தாகியும், விருப்பு வெறுப்புருவாகியும், வில்லங்கசாதனமாகிய வினையை வளர்க்குந் தாயாகியுமுள்ள ஆசைநாசமே அது. அன்பிற்கனிந்த அருட்டீங்கனியினின்றொழுகும் அறிவுரசத்தை கிரம்பப்பருகினர்க்கன்றி யஃதோ கிட்டுதலரிது. விடயபோகியாயுள்ள புருடனொருவன், நச்சியபொருள்கண்மேற் பற்றுவிடாது கணந்தோறும் மனமகலாது சேரகிற்றலைச் சகத்திடையெங்குஞ் சவிஸ்தாரமாகக் காணலாம். எத்திறத்தவராயினும், மனம் ஏகாக்கிரப்பட்டாலன்றி யெத்துணைச் சிறிய தொழிலையுந் திருத்தமாகச் செய்துமுடித்தல் கூடாது. விரிந்தநெஞ்சுடையார்பக்கல் விசேடமாக விவகாரபங்கம் விளைவதை விளங்கக்காணுதலுண்மையே. மனமெதினுஞ்சென்று பற்றவிட்டு மீண்டுமோர் பொருளிற்செலுத்தியலையுமநேகர் சோம்பேறிகளாக வெப்பயனும்பெறாது வறிதே பொழுதை வெறியர்போலக் கழிக்கின்றனர். தொடர்ந்த விடயத்தில் வாஞ்சையோடுஞற்றுபவர் பயனடைவது சரதம். அதற்குக் காரணம், அவாவிய பொருள்மேலன்புமுதிர்ச்சியுண்டாதல்தான். எக்காரியமாயினும் நற்பலனையோ, தீயபலனையோ தரினும் திடசித்தத்தோடு செய்பவர் சிறப்புறுவர். ஆகலின் எவ்விடயத்தையும் முடித்துப்பயனடைதற்கு மனஏகாக்கிரமே முதற்காரணமாகின்றது. மனஏகாக்கிரமாவதும் அன்புமுதிர்ச்சியேயன்றி வேறில்லை. அவ்வன்பு முதிர்ச்சியிலோர்வித விளக்கமுண்டாகும். அவ்விளக்கமே அருள். அதாவது பலப்பிராப்தியைக் காட்டுமோர் குறி. அக்குறியைத் தொடர்ந்து செல்லின் கோரியபலன் மனத்துக்குப் புலப்படும். அவ்வாறு புலப்படுதலே பலப்பிராப்தியாம். அப்போது அவாவிய விடயஞானமுண்டாகிறது. உண்டாகவே அனுபவசித்தி பலிக்கும். அப்பலிதமே யாநந்தப்பேறு. அவ்வாநந்தப்பேற்றினால் மனம் விடயமயமாய்த் திகழும். ஆயினும் மாயாமயக்கம் மறுபடியும் மற்றுமோர் பொரு

ளிற் புகுத்தும். இப்படியே சுழலிலகப்பட்ட துரும்புபோல் மேல் கீழாயுங் கீழ்மேலாயுஞ் சிறிதுமோய்வில்லாமல் ஆங்காங்குச் சென்றலையும். ஆனதுபற்றியே மனக்குரங்கெனப. அது சித்தின்முயல்வாற் சித்தாகும். ஜடத்தின்முயல்வாற் சடமாகும்.

பொய், சடந்துக்கமாகும் புவனவிவகாரத்துக்கே அன்பிற்கனிந்த வறிவுதயம் வேண்டுமென்றால், சச்சிதாநந்த பரவிவகாரத்துக்கு அது அத்தியாவசியமென்ன அறையவேண்டுவதில்லை. மலையடிவாரத்தினின்றுகொண்டொருவன் உச்சியைநோக்குவானாயின், விசேஷமாகத் தென்படாது. கீழேயுள்ள பதார்த்தங்களே நன்றாய்த்தோன்றும். அப்புருடன் மலையேறத்தொடங்கி மேற்செல்லுந்தோறும் வரையடியிலுள்ள வஸ்துக்கள் அருகித்தோன்ற மேலேயுள்ளவைகள் சிறிது சிறிதாகத் தோன்றி மகுடத்தையடைந்தவுடனே கீழேயுள்ளவைகள் தோன்றியும் தோன்றாமலுமிருக்க மேலுள்ளன வியக்தமாகத்தோன்றுமாறு விடயாநுபவ விருப்பத்தை விட்டுப் பரனருளெய்தப்பெற்று மேனிலைசெல்லுங்காலத்துமிருக்குமென்பது உணர்ந்தோர் துணிபு. ஏதாவதொருவிடயத்திற் பிரியமதிகரித்துக்கொண்டேவருந்தோறும் மற்றவிடயங்கள் அருகித்தோன்றுவது உலகவியற்கை. எடுத்துக்கொண்ட விடயமுயற்சி பலனுக்குவந்தால் அஃதாவது அதின்பிரயோசனமின்னதென்று தெரிந்தால், அப்போது இதரவிடயங்களின்மேற் சிறிதுநேரமாயினும் மனம்பற்றாது ஏகரீதியாய் அவ்விடயமயமாயே தனித்துநிற்கும். அப்பால் விரிந்து வேறோர்விடயம்பற்றும். அன்னவண்ணமே சென்றுசென்றிளைத்துச் சிறிது சிறிதாக விடயானுபவத்தில் வைத்திருந்த விருப்பை வெறுப்பாக்கும். அப்போது அதின் நிலையாமை தோன்றும். தோன்றினும் பழையபழக்கம் மிகுதியான் விட்டுவிட்டுப் பற்றிநிற்கும். நாளடைவிற் பாசமுயற்சி பழுதுறப் பசுமுயற்சிகைகூடும். அதிலேயும் அநேகநாள் மொத்துண்டு உண்மையுணர்ச்சியின்றி ஒப்வடையும். நிழலருமை வெயிலிற் போனால் மட்டுமே தெரியும். அசுப (பாச, பசு) முயற்சிகளின் விரிந்தவிகாரகோரங்கள் சகிக்கலாற்றாது சுப (பதி) முயற்சியை நினைக்கும். நினைத்தாலுமென்ன? அந்தோ! பரிதபித்து உழன்று கொஞ்சங்கொஞ்சமாய்த் திடப்படின், அசுபமுயற்சி அருகிக்கொண்டேவரும். மன

மோ இருபொருன்களை ஒரே காலத்திற் பற்றமாட்டாது. அது
தற்போதத்தடிப்பாற் பற்பலவிடயங்களிற் புகுந்தலுத்த நிமித்தம்
விசிராந்தியடையும் வண்ணஞ் சற்றே மேனோக்கும். நோக்கிநோக்கி
வருந்தினகாலத்தில் அருட்போதத்தைபணுகும். அணுகினும் வா
சனைப்பழக்கத்தினாற் சிறிது அயரும். மீண்டுமேனோக்கும். சூடுண்ட
பூனை அடுப்பண்டை நெருங்காததுபோல விடயதுக்கத்துட்பட்டுழன்
றதனால், கடையன்பு தோன்றி முதிரமுதிரத் தலையன்பின்பக்கல்வந்
துசேரும். அப்போது அருள் சிறிது வலிக்கும். விடயம் வெறுப்பாய்
த்தோன்றும். அந்நிலைதான் துறவு. அஃதாவது முன்னர் விடயத்தின்
மேல் வைத்திருந்த விருப்பைமாற்றிப் பரத்தின்மேல் வைத்துப் பர
த்திடை வைத்திருந்த வெறுப்பை விடயத்தின்மேல் வைத்து நிலைபெ
றலே. அதுவும் மெல்லமெல்லத்தான் திடப்படும். திடப்பட்டநிலை
யே மெய்புணர்ச்சி, உண்மை, யின்மைப்பொருள் என்ற பேதந்தோன்
றலால். விளக்கேற்றினவுடனே இருள்தேடினுஞ்சிக்காதது போல
மெய்புணர்வு தலையெடுத்தமட்டிலே எவ்விடயத்தின்மேலும் ஆசை
யகப்படாதோடிவிடும். அநர்த்தபுத்தியுநீங்கும். உபேக்ஷையுண்டா
கும். விருப்புவெறுப்பின்றிச் சமதிருஷ்டியோடு நிற்கும். இந்நிலை
யிலே தடையற்றவானந்தம் பிறத்தலின், அவாவறுத்தல் அல்லது
ஆசைக்கேடு என்னலாம். ஆசைக்கேடு ஆனந்தந்தான். ஆசையுள்ளள
வுந் துக்கமே. துக்கமிருக்கும்வரை பயமுண்டு. பயமுள்ளமட்டுமன்
பில்லை. அன்பில்வழியிற் சுபாசுபமுயற்சியில்லை. முயற்சியின்றெனி
ன் அனுபவமுமில்லை. அனுபவமில்லையேல் ஆனந்தமில்லை. ஆதலால்,
பத்திஞானமே சிறந்த முத்தியுபாயம்.

சொக்கலிங்கம்.

464

உ

சிவமயம்.

தஞ்சைத் தமிழ்ச் சங்கம்

நான்காம் வருட மகோற்சவச் சிறப்பு :—

1905-௵ அக்டோபர்-௴ 7உ யன்று மாலை 4-மணிக்கு கற்றோரும் மற்றோருமாகத் திரண்டு சிற்றுண்டியேற்று, தஞ்சை ஸ்ரீ பெஸண்ட் லாட்ஜில் கூடினார்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கஸ்தாபகரும், அக்கிராசனரும், பாலவனத்தம் ஜமீன்தாருமாகிய ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத்தேவர் கோமானவர்கள் அக்கிராசனம் வகித்தனர். கலாசாலை மாணாக்கர்களில் ஒருவரான M. N. இராமய்யா வென்பவர் பரமபதியைக் குறித்துத் தோத்திரஞ்செய்தார். தேவர் கோமானவர்கள் வருகையைக் குறித்து, ஸ்ரீமத்-ஐ. சாமிநாத முதலியாரவர்கள்இயற்றியவருகைப்பத்திரமும் பின்னத்தூர் ஸ்ரீமத்-நாராயணசாமி ஐயரவர்களியற்றிய அகவற்பாவும் வாசிக்கப்பெற்றது. அக்கிராசனர் அனுமதி பெற்றுக் காரியதரிசியவர்களால் அறிக்கைப்பத்திரமும், வரக்கூடாமை பற்றி விடுத்த ஸ்ரீமத்-கந்தசாமிக்கவிராயரவர்கள் (விவேகபாநு பத்திராதிபர் மதுரை) ஸ்ரீமத்-து. வி. கோபிநாதராவ் M. A., அவர்கள் தந்திகளும், கோயம்புத்தூர் ஸ்ரீமத்-S. P. நரசிம்மலு நாயுடு அவர்கள், மதுரை ஸ்ரீமத்-P. நாராயண அய்யரவர்கள், மணலூர் ஸ்ரீமத்-ராமாநுஜ அய்யங்காரவர்கள், நாகை நீலலோசனி பத்திராதிபர் ஸ்ரீமத்-ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள் கடிதங்களும், படிக்கப்பெற்றன. திருவாரூர் ஐஸ்கூல்பண்டிதர் ஸ்ரீமத் சுந்தரேச பாரதியாரவர்கள், **தமிழின் செல்கால நிகழ்கால வருங்கால ஸ்திதியைப்பற்றி** வியாசம் எழுதி வாசித்தனர் : முற்காலத்து வடநாட்டரசர் தங்கள் காலத்தையும் பணத்தையும் அயல் நாட்டரசர்கள் தம்மை எதிர்த்து வருத்தா வண்ணம் செய்து கொள்ளும் விஷயத்திலேயே செலவிட்டு வந்தார்கள். தமிழ் நாட்டரசர்களுக்கோ அப்படிப் பட்ட கஷ்ட நிஷ்டூரங்களில்லாமையால் தங்கள் காலத்தையும் பணத்தையும், தங்கள் புகழ் நீடித்திருக்கச் செய்யத்தக்க புலவர்களைப் போற்றுவதிலும் ஆலயங்களை நிருமிப்பதிலும் செலவிட்டார்கள் என்பதற்குப் பிற நாடுகளில் அவை அருகியும், இந்நாட்டில் அவை பெருகியுமிருப்பதே போதிய சான்றாகும். புலவர்களை மற்றவர்களினும் இந்நாட்டார் மிகப் போற்றினர் என்பதற்கு, புறநாட்டில் காளிதாசன் முதலிய வித்துவான்கள் சிற்சிலரே யுள்ளார். தமிழ் நாட்டிலோ தெய்வீக முச்சங்க நிகழ்ச்சியும் ; தெய்வப் புலமைத்திருவள்ளுவர், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகப்புலவர், சேக்கிழார் முதலியோர் மூவேந்தராலும், பிற்காலத்தில் புறநானூறு முதலிய புராதன நூல்களியற்றியுள்ளார் தமிழ் நாட்டுச்

சிற்றரசர்களாலும் போற்றப்பட்டும், ஒரு துறைக்கோவை பாடிய அமிர்த கவி (அக்கிராசனர் மூதாதை) களில் ஒருவரான ரகுநாத சேதுபதி கனகாபிஷேகஞ் செய்து தானுந்தன் பத்தினியாருமாக சிவிகை தாங்கிப் போற்றப்பட்டும், குமரகுருபரசுவாமிகள் புறநாட்டரசராலும் போற்றப்பட்டும் வந்ததே சான்றாகும். செல்கால மிங்ஙனமாகத் தற்காலத்தில் மூவேந்தருமடங்கிச்சிற்றரசு மொடுங்கிக் கல்வியபிவிர்த்திக்கென்றே யுள்ள மடாதிபதிகளும் வேறு வகையில் முயலவே, புலவர்கள் தந் தொழிலைக் கைவிட்டுப் பிற தொழில் கைக்கொள்வாராயினர். நூல்படிப்பவரே யில்லை. படிப்போரும் முறை பிறழப் படித்துத், தாமரைக் குளத் தவளையைப்போல் போலிப் புலவராயினர். பெரும் புலமை வாய்ந்தவர்களைத் தூற்றுவதே தம் புலமைக்கு அங்கமெனவுங் கொண்டனர். தாய்ப் பாஷையைப் பேணுதார் தலை எடுப்பதியலாது. அதனைப் பேணுவோர் தலைமை பூணவுங் கூடுமென்பதற்கு ஜப்பானியரே போதிய சான்றாம். தமிழின் இத்தகைய நிலைமையைக்கண்டு இனி வருங்காலம் இதனினும் தாழ்ந்திடக் காணலாமென்று வியாசத்தை முடித்தனர்.

தஞ்சை S. P. G. காலேஜ் பண்டிதர் ஸ்ரீமத் R. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்: தாய்பாஷாபிவிருத்தி ஜாதியாரின் மேன்மைக்கு இன்றியமையாதது. ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர் பெரிதும் சிறிதுமாகிய பல வேலைகளில் பல விடங்களிலமர்த்தும் ஒரு வேலையுமின்றி பிறந்த விடத்திலேயே இருந்து விடுவதும் இயல்பு. பெரிய வேலையிலமர்ந்துள்ளார் தமக்குக் கிடைத்த பெரும் பொருளை பின்னடைந்து நிற்கும் மற்றைச் சகோதாருக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழ்ந்து வாழ்வதே வாழ்க்கையின் முக்கிய நோக்கம். அதுபோல, நம்மவர்களில் ஆங்கிலம் பயின்றவாகள் ஆங்காங்குள்ள பெருநலங்களைத் திரட்டி நமது தமிழ்ப் பாஷையிற் கொண்டுவந்து பின்னடைந்து நிற்கும் சகோதரரைப் போஷிக்கவேண்டும் ஆங்கிலம் பயின்றவர்கள் சுய நலத்தை மாத்திரம் பாராட்டல் கூடாது. தமது பணத்தை இன்னின்னருக்கு இத்துணை செலவிட்டோமென்று கணக்கிடுவதுபோல், காலத்தையும் இன்னின்ன விஷயத்தில் இத்துணை செலவிட்டோமென்று கணக்கிட்டுத் தாய்பாஷாபிவிருத்தி விஷயமாய் செலவிட்ட காலத்தைப் பெருக்கல் வேண்டும் என்று உபந்யவித்தனர்.

கலியாணசுந்தரம் கல்லூரி உபாத்தியாயர் ஸ்ரீமத்-V. சுப்பய்யரவர்கள், B.A., யின் ரசாயனசாஸ்திரவிஷயம்:—கரியும் பிராணவாயுவும் சேர்ந்த ஒரு பதார்த்தம் கரியமலவாயு. ஜலத்தைப்போல ஒன்றிவிருந்து ஒன்றில் கொட்டக்கூடியது. அதிலுள்ள கரியால் தாவரங்கள் வளருகின்றன. அக்கரியமலவாயு பிராணிகளிடத்திலிருந்தும், நெருப்பிலிருந்து முண்டாவது. அது இருக்குமி

டத்து நெருப்பெரியாது. அதையுட்கொண்டால் மரண அபாயமுண்டாகும். கரியில், அடுப்புக்கரி விளக்குக்கரி எலும்புக்கரி வயிரக்கரி எனப்பல வகையுண்டு. கரியினால் ஜலத்தின் நிறமுதலியவற்றை மாற்றிச்சுத்தி செய்யலாம். எனப்பலவிதக் கருவிகளைக்கொண்டு கண்கூடாக் காட்டி அதற்குள்ள பரிபாஷைகளைத் தமிழ் வார்த்தையைக்கொண்டு வெளியிட முயற்சித்தால் எந்தசாஸ்திரப் பரிபாஷைகளையும் தமிழில் மொழி பெயர்த்தல் எளிதாகும் என்று சொல்லி முடித்தனர்.

அப்போது மணி 6 அடித்தது. மின்சாரமணிவிளக்கேற்றியபின் அக்கிராசனர் எழுந்து, மதுரைத்தமிழ்ச்சங்க ஆங்கில தமிழ்ப் பரீக்ஷையில் M. N. ராமய்யா தேறியதற்காக பெறுதற்குரிய யோக்கியதாபத்திரம் அச்சங்கத்தீர்மானப்படி இக்கல்லூரி மானேஜருக்கு அனுப்பியிருந்ததை, இச்சபையக்கிராசனம் வகித்து தம் கையாலேயே கொடுக்க நிகழ்ந்ததை வியந்து, தம்மால் மதுரையிலிருந்து செய்ய வேண்டிய காரியத்தைத்தஞ்சையில் வந்து செய்யும்படி நேர்ந்ததைப்பார்க்க இவ்விருநகர சங்கத்திற்கும் உள்ள அபேதத்தை எளிதில் புலப்படுத்துகிறது என்று யாவருள்ளத்தையும் காந்தமெனக் கவரவுரைத்தனர். கலாசாலையிற்றேறிய பின்னுமூவர் புத்தகங்கள் பரிசளிக்கப்பெற்றனர்.

அக்கிராசனர் உபந்நியாசம்:—அவையடக்கம் வியக்கக்கூறித் தமிழின் உயர்வைப்பின் வருமாறு உபந்நியசித்தனர். தமிழ்ப்பாஷை கடவுட்டன்மையுடையது. காலவரம்பற்றது. சரித்திரமின்மையாற் குறைவுளதன்று; அஃதிருந்தால் சிறப்புடைத்தாமெனினும் காலத்தைக் கணக்கிடல் அசாத்தியமானது. முன்னோர் அறம் பொருளின்பங்களையே பெரிதாகக் கொண்டனரேயன்றி, காலத்தைப்பெரிதென்று கொள்ளவில்லை. ஆகலின் காலத்தைக் கண்டசரித்திரங்கள் தமிழிலில்லை. ஆங்கில முதலிய பாஷைகளைப்போல இன்னகாலத்தில்இன்ன இடத்திருந்துஇன்னஇடத்திற்குக்குடியேறியதென்று சொல்ல வகையில்லை. தமிழ்வழங்கும்நிலம் "குணகடல் குமரி குடகம் வேங்கட" மெனப் பிற்காலத்தார் எல்லை கூறினரேனும் பாண்டவர்காலத்து அத்தினபுரம்வரையில் பரவியிருந்ததாகப் பாலைக்கௌதமனாற் கூறிய புறநானூற்றுச் செய்யுளால் விளங்கும். பாலை நிலத்தைப்புகழ்ந்தாராகலின், பாலைக்கௌதமனெனப்பட்டார். இவர் வியாசர் வான்மீகர்காலத்தவர். வடமொழியிலுள்ள முறைப்பெயர் சில ஆங்கிலபாஷையிலிருப்பதாலும், தமிழ்பாஷையிலுள்ள முறைப்பெயர் சில சீன பாஷையிலிருப்பதாலும்; ஆங்கிலமும் வடமொழியும் ஓரிடத்தது; மற்றிருபாஷையும் ஓரிடத்தது என ஆங்கில பாஷையிலுள்ள சரித்திர ஆராய்ச்சிநூல் வல்லார் கண்டுபிடித்துள்ளார்கள். ஆகலின் சீன தேயம் வரையில் தமிழ்பரவியுள்ளதாகத் தெரிகிறது. தமி

ழென்று குறிக்கும் திராவிடம் என்ற சொல் வடமொழியிலிருத்தலால் அனு
தியாயுள்ளது. வடமொழி, பேசும் பாஷையின்மையால் சுத்தமாய்ப் புலவர்
பாலிருந்து வந்தது. தமிழ் பேசும் பாஷையாதலாலுந்திசைச் சொல்கலத்தற்
கிடம் பெற்றுத்திரிந்தமையாலுஞ் சிதைவுகொண்டது. வடமொழி தென்
மொழியிரண்டும் கண்ணுதற் கடவுளுடமிருந்து தோன்றியது,

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார்முனி வேந்தரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇனா ரென்றாலிவ்
இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ.

என்பதனாலறி
யலாகும் அகத்தியரால் தமிழுற்பவித்தது என்பது பொருத்தமன்று. அக
த்தியரைத் தென்றிசைக்கனுப்பிய காலத்தில் அவரது வேண்டுகோளுக்கிண
ங்கித்தமிழிலக்கணமவருக்குபதேசிக்கப்பெற்றது, வடமொழிஇலக்கணம் பா
ணினிக்குபதேசித்தது போல். ஆகலின் தமிழ்ப்பழமையினும் பழமையானது.
தமிழைத்தென்னாட்டுத்தமிழ்வேந்தர்மூமருமாதரித்துவந்தனர். தேவபாஷை
யாகலின் இருடிகளாலும் ஆதரிக்கப் பெற்றது. இப்பால் இந்நாட்டில் அன்
னிய அரசாட்சிப் பிரவேசத்தால் பல்பாஷைகள் கலக்க நேரிட்டது. தெ
லுங்கு கன்னடம் மலையாளம் முதலியவை தமிழின்சிதைவு. இவைகளுக்
குத்தமிழ்தாய்ப்பாஷை. தமிழ்துருக்கர்காலத்துமிகக்கஷ்டமடைந்தது. யாது
காரணத்தாலோ விசாரியாது புதியதொன்றை கைக்கொள்ளுவதும் பழமை
யைவிடுவதும் தமிழர்களது இயற்கைக் குணம். ஆகவே, இப்போது ஆங்கில
ரது ஆசாரம் கையாளப்பட்டுவருகிறது. இதனால் நம்மவரால் அவமதிப்ப
டைவதன்றி ஆங்கிலராலு மிகழப்படுகிறார்கள் "பழயன கழிதலும் புதியன
புகுதலும் வழுவல காலவகையினானே" எனக்கொண்டார் போலும். ஒவ்
வொன்றையும் சுருதி யுக்தியனுபோகத்தாலாராய்ந்து கொளல் வேண்டும்.
ஆங்கிலபாஷைக்குக் கடவுட்டன்மையின்மையால் அதனைக் கற்ற ஐரோப்பி
யர் வடமொழி தென்மொழிகளைச்சுத்தமாக வசனிக்கும் திறமையில்லை. தெ
ன்மொழி வடமொழி கடவுட்டன்மையுண்மையால் இப்பாஷைகளைப் பயின்
றவர் ஐரோப்பியரும் வியக்குமாறு வசனிக்கும் திறமுடையராகின்றனர். ஆங்
கிலேயம்பயின்றவடதேயத்தார், அகத்தில்பேசுவதுதங்கள்தாய்ப்பாஷையே.
ஆங்கிலம்பயின்ற தென்றேயத்தார் அகத்தில் பேசுவதும் ஆங்கிலமே. கல்வி
கற்பது அறிவுவிருத்திக்கு. அதன்பொருட்டு ஆங்கிலம் கற்பதால் குற்றமில்
லை. ஐரோப்பாவில் அறிவு விருத்திக்கென்றே ஆயுள்பரியந்தம் கற்கின்றார்
கள். நம்மவர்பரீக்ஷைக்கென்றே படிக்கிறார்கள்; மருந்துடையவன்பத்தியநா
ட்கழிப்பதுபோல. பிறகு படிக்கிறதேயில்லை. பரீக்ஷைமுடிந்தால் உத்தியோ
கத்திலமர்ந்து விடுகின்றனர். மரம் வைத்தால் நிழலைத்தரும். கல்விகற்றால்
அறிவைத்தரும் "ஒருமைக்கட்டான் கற்றகல்வி யொருவர்க்கெழுமையுமே

மாப்புடைத்து.” மனைவியைஅடை-வது சுகத்தின்பொருட்டு. அவள் நிமித்தம் தாயை இகழலாகுமா. அங்ஙனமாக ஜீவனார்த்தமாகஆங்கிலம்பயின்றாலும் புருஷார்த்தங்களைத்தரும்தாய்ப்பாஷையைஇகழலாகாது.ஜப்பானியர் 38 வருடங்களுக்குள் முயற்சியால் பெரும்பலத்தையடைந்துள்ளவர்கள். ஆங்கிலம் பயின்றவர்தாமறிந்த நூதனவிஷயங்களை நீடித்திருக்கும்படி தமிழில் மொழிபெயர்த்து எழுதிவைத்தல்வேண்டும். ஆங்கிலம் கற்றற்குக்கூலியில்லை. முயற்சிக்காசத்தான் கூலி. யாவரும் கற்கவேண்டியதவசியம். “ விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல்கற்றாரோடேனையவர்” என்றார் நாயனாரும். கற்பனை யெல்லாப்பாஷைகளிலுமுண்டு. தமிழ்ப்பாஷையின் கற்பனைகளினால் அக்காலத்திய நாகரீகப்பெருமை எளிதில் விளங்கும். “ ஒற்றையாழியான்” “ உற்கையென்றெறியும்” இவைகள் போன்ற சில கற்பனைகள் போக நாட்டுச்சிறப்பு நகரச்சிறப்புகள் இகழ்தற்பாலவல்ல. “ குணநாடிக் குற்றமு நாடியவற்றுண்மிகை நாடிமிக்ககொளல்” என்றாராகலின், நாட்டுப் படலத்தால், ஆற்றுப்பெருக்கும், அந்நீரைக்குறிஞ்சிமுல்லை மருதம் நெய்தல் இந்நிலமாக்கள் உபயோகித்துச்செய்யும் கிருஷியும் நன்குவிளங்கும். நகரப்படலத்தால், சிற்பம், இயந்திரமுதலிய சாத்திரப்பயிற்சி விளங்கும். ஆங்கிலசிற்பிகளும் அதிசயிக்கத்தக்க தஞ்சைமாநகர்க்கோயிலின் விமானமும், இராமேசுவரம் சொக்கட்டான் மண்டபம் முதலிய பலவுள்ளன. பொறிகள் புட்பவிமானம் உளவாகத் திருவிளையாடற்புராணம் சீவகசிந்தாமணி பாரதம் முதலியவற்றாலறிகிறோம். இவை இப்போதுள்ள புகைக்கூண்டின் வரலாற்றை விளக்கும். அச்சாத்திரங்கள் இப்போது இறந்தமையால் அத்தொழில்களைக் கைவிடநேர்ந்தது. தமிழ்ப்பாஷையில் சிற்பமுதலியவையில்லையென்று நினைப்பது பேதைமை. ஆங்கிலம் கற்றவரில் ஒரு சிலர்தவிரப் பெரும்பாலருக்கு ஒவ்வொருசாத்திரமேவரும். தமிழ்ப்பாஷை கற்றால் எல்லாச் சாத்திரமும் வரும். இப்போது ஐயரவர்கள் காட்டிய ரசாயனச் சோதனையால் கண்ணுங் கருத்தும் களியுற்றது. பலமுயற்சியால் பிறரிடமுள்ள பொருளைப் பெருமாறு போல, ஆங்கில பாஷையிலுள்ள நவீன சாஸ்திரங்களைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ளவேண்டிய தவசியமாயினும் தமிழை இகழ்தல் கூடாது. முற்காலத்தவர்போல தத்தம் தொழிலைத் தாம்-பயிலாது கைவிட்டுப் பிறதொழிலைக் கைக்கொள்ளுவாராயினார். ஆகலின் இப்போது சாத்திரப்பயிற்சி முதலிய குன்றுவவாயின. தத்தந் தொழிலைத் தாம் தாம் கைக்கொண்டிருந்தார் என்பதற்குத் தர்ம வியாசன் கதையே போதிய சான்றாகும். இத்தத்துவ சாத்திரங்களை நம் முன்னோர் பெரும் பொருளாகக் கொண்டிலர், சரீர தத்துவ ஆராய்ச்சியையே பெரும் பொருளாகக்கொண்டவராகலின். இதற்கு அவர்கள் எழுதி வைத்திருக்கும் நூல்களே தக்க சான்றாம். சரீரம் பஞ்சபூதத்தாலா

னது. இரசாயன சாஸ்திரத்தால் ஒன்றை யொன்று மாற்றிக்கொள்வது போல சரீர தத்துவவுணர்வால் ஆயுளை நீடிக்கச் செய்து கொள்ளுவது முதலியன இலகுவாயிருந்தது. தசரதர் 60,000 வருடங்கள் நாடாண்டது கட்டுப்பாடன்று. இப்போதுள்ளவர்கள் யோக மார்க்கத்தை யனுட்டிக்கிறதில்லை. அதன் அனுபோக சித்தி எழுதிவைக்க இயலாதது. வைத்திய நூல்களும் பல விருக்கின்றன. வானசாஸ்திரம், ஆங்கிலர், கண்ணாடி முதலிய பல கருவிகளாலறிந்தவற்றை, நம்மவர் சோகி முதலியகொண்டு எளிதில் கணக்கறியக்காட்டுவர். "தமிழாசாரங்களை மறந்து ஆங்கில ஆசாரங்களைக் கைக்கொண்டு வெகுதூரம் போய்விட்டோம். மெல்ல மெல்லத்தான் திரும்பல் வேண்டும். திரும்பி நமது வழிக்குவர சென்ற காலத்தில் பாதியாவது வேண்டும்." என்று வயதில் முதிர முதிர மதிமயங்காது அறிவில் முதிர்ந்து வரும் திவான்பகதூர் ரகுநாதராவ் அவர்கள் சொல்லியிருப்பது யாவருமறிவார்கள். பரமான்மாயாவையும் தானேயறியும் சக்தியுள்ளது. ஜீவான்மா அறிவித்தாலறியும் சக்தியுள்ளது. குழந்தை தாயைத் தானேயறியும். தாய் காட்டத் தகப்பனையறியும். தகப்பனால் குருவையும், குருவினால் தெய்வத்தையு மறியும். அதுபோல் தாய்ப்பாஷையில் விஷயத்தையறிகிறோம். அதைக்கொண்டு மற்றப்பாஷைகளைத் தெரிந்து கொள்ளுவதால் ஆதியில் கற்றபாஷையே தாய்ப்பாஷையாகும். தமிழ் பழமையாலும், ஆன்றோராதரித்து வந்தமையாலும், நமக்குத் தாய்ப்பாஷையானதாலும் உயர்வுபெற்றது. ஆங்கில பாஷையில் உயர்வைச் செய்ததும் தமிழ்ப்பாஷையே. மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் வந்து பார்த்து வந்த ஐரோப்பியர்கள் எழுதிவைத்திருக்கும் குறிப்புக்களே, தமிழ் தலையெடுக்கும் விஷயத்தில் அவர்களுக்குள்ள ஆனந்தத்தைவிளக்கும். எத்தனையோ நன்மைகளை நமக்களித்த தாய்ப்பாஷையாகிய தமிழைக் கைவிடுவது செய்ந்நன்றி கொன்றமையாகும், "எந்நன்றி கொன்றார்க்குமுய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்றாகலின், பலவித்துவான்கள் பலகாலம் சொன்னாலும் தமிழின் பெருமை சொல்லப்போகாது. ஒரு மனிதன் முகத்தையே பாராமலிருக்கையில் அவனழகைத் தூஷிப்பதுபோல தமிழின் பெருமையையறியாது தூஷிக்கிறார்கள். தமிழை யனாதரவு செய்யலாகாதென்று இப்போது உங்களுக்கே தோன்றும். தமிழ்ப்பாஷையிலுள்ள நூல்களில் ஐந்திலிரண்டு பாகம் இறந்துவிட்டது. அகத்தியம், அகத்தியமில்லாமற் போய்விட்டது. தமிழபிவிருத்திக்கு அச்சு இயந்திரம் முக்கிய காரணம். காடு கரடு தெரிந்து படிக்கத்தெரியுமா? என்பது ஆன்றோர் வழக்கு. அச்சங்கடங்கள் இப்போதில்லை. ஆங்கில பாஷைப் புத்தகங்கள் வெளியானால் வேண்டுமளவு செலவாகும். தமிழ்ப்புத்தகங்கள் செலவாகிறதில்லை. ஜப்பானியர் தேசாபிமானத்திற்காக உயிரையுங் கொடுக்கிறார்கள். ஆகலின்

தேசாபிமானத்திற்காகவாவது தமிழ்ப் புத்தகங்களை வாங்கல் வேண்டும். புராதன ஏடுகளைத் தேடிக் கண்டு, உபயோகப்படக் கூடிய விடங்களுக்குக் கொடுத்துதவல் வேண்டும். "நவிறொறு நூனயம் போலும் பயிறொறும் பண்புடையாளர் தொடர்பு" "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை இன்மைபுகுத்திவிடும்." ஆகலின் கனதனவான்களியாவரும் தமிழை யனுதரவு செய்யாது 300 லட்சம், ஜனங்கள் பேசிவரும் இத்தனித்தமிழ்ப்பாஷையைத் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்து ஆதரிக்கவேண்டும். தமிழபிவிருத்தியில் ஜனனமுதல் அபிமானம் வைத்த எனக்கு "வந்தனப்பத்திரம்" "வருகைப்பத்திரம்" முதலிய கூறியது மிகையாம். தமிழபிவிருத்திக்காக எனதுடல் பொருள் ஆவி மூன்றையுங் கொடுக்கவும் தயாராயிருக்கிறேன். இச்சங்கத்தின் அக்கிராசனர் அவர்களுக்கும் காரியதரிசியவர்கள் முதலியோருக்கும் சபையாருக்கும் வந்தனம் எனப் பிரசங்கமாரிபொழிந்து, யாவரும் நீடூழி வாழ வாழ்த்தியருளித் தேவர் கோமான் அவர்சள், தேவர் கோமானுகவேயமர்ந்து விளங்கினர். சபையார் யாவரும் இறும்பூதெய்திக் கடன் மடைதிறந்தாற்போல் பிரவாகித்த பிரசங்கித்ததைக் கண்ணுங் கருத்துமாய்க் கேட்கவே இமையா நாட்டம் பெற்றுத் தேவர்களேயாயினர்.

பின் காரியதரிசியவர்களெழுந்து அக்கிராசனரவர்களுக்கும், சபையாருக்கும், தஞ்சை தமிழ்ச்சங்க விருத்திக்கென்று ரூ 50 பொருளுதவிய ஹரித்துவார மங்கலம் ஸ்ரீமாந். V. கோபாலசாமிரகுநாதராஜாளியாரவர்களுக்கும்; ரூ 5 பொருளுதவிய ஸ்ரீமத். T. ராஜமய்யங்கார் B. A. L. T. அவர்களுக்கும், வருஷோற்சவச் செலவுக்காக வெகு பிரயாசையோடு பொருள் தேடி உதவிய ஸ்ரீமத். வ. நா. அப்பாசாமி அய்யரவர்களுக்கும் வந்தனங் கூறினர். பின் நாகை நீலலோசனிப் பத்திராதிபர் ஸ்ரீமத்ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள் சமர்ப்பித்தச்சிட்டனுப்பிய வாழ்த்துப் பாக்களை இசையோடு வாசித்து சபையார்யாவருக்கும் வழங்கலாயினர். பின்சபைகலைந்தது. தேவர்கோமானவர்கள் நீடு வாழ்க.

இங்ஙனம்,

மு. சாம்பசிவநாயனர்.

பூச்சியைத் தின்று வளரும் பூண்டுகள்.

நாம் எடுத்துக்கொண்ட இவ்விஷயத்தின் பெயரைக்கேட்ட மாத்திரத்திலேயே பலர்க்கு நகைப்பும் வியப்பும் உண்டாகாமல் இரா. ஏனெனில், "ஆயு மலர்த்தேன் வண்டு அருந்துவது"ம், தூய இளம் பச்சிலையைக் கீடம் அறப்பற்றி அரிப்பதுவும், கறையான், கம்பளிப்பூச்சி, வெட்டுக்கிளி, பட்டுப்பூச்சி, மூசுக்கட்டை முதலியன, காய் கனி கந்த மூலாதிகளை அழித்து உண்பதுவுமே பலரும் பார்த்தறிந்த விஷயமாகும். ஆதலால், பயிர் பச்சைகளைப் பூச்சி புழுக்கள் உண்ணவே பார்த்தோர், பூச்சி புழுக்களைத் தின்று வளரும் பூண்டு செடிகள் உளவென்று கேள்விப்படின், ஏனோ அவர்களுக்கு நகைப்பு உண்டாகாது? என்னை? அறிவு சிறிதுமின்றி பூமியில் வேர் ஊன்றி, தாமாக அசைதலும் உணர்தலுமின்றித் தோன்றிய இடத்திலேயே வளர்ந்து அழியும் இயல்பினவாகிய ஸ்தாவர வஸ்துக்கள், இயங்கவும் உணரவும், அறியவும் தாமாய் ஒரு தொழில் புரியவும் வல்ல ஜீவ ஜந்துக்களை உண்ணும் என்றால் யார் நம்புவர்? அன்றியும், விருக்ஷ வர்க்கத்தைச் சார்ந்த நானாவித செடிகளும் பூண்டுகளும் மிசிரப்பட்ட சாதாரண வாயுவினின்றும் ஜீவஜெந்துக்கள் வெளிப்படுத்தும் விஷ வாயுவை இடை விடாமல் உட்கொண்டு வளர்வதே சகஜமாயிருக்க நாம் சொல்லப்புகும் பூண்டுகள் பூச்சிகளையும் தின்பனவென்னில் அஃதொரு புதுமையேயன்றோ?

ஆனால் மனிதர்களுள் தமோ குணப் பிரகிருதியுள்ளோர் சாக பக்ஷணிகளாகவும் மாமிச பக்ஷணிகளாகவும் இருப்பது போலவே நாம் ஈங்கெடுத்துக் கூறப் புகும் பூண்டுகளும் ஏனைய செடிகளைப் போன்று விஷவாயு, தாதுப்பொருள்கள் முதலியனவற்றை உட்கொள்வதோடு நில்லாமல் பெரும்பாலும் பூச்சி புழுக்களைத் தின்று கொழுத்துக் கொழித்து வளர்கின்றன.

இப்பூண்டுகளுக்கேற்ற இந்தியப் பெயர்கள் இன்னவென்ன யாம் அறியோம். ஆதலின், இவ்வற்புதப் பூண்டுகள் நமது இந்தியாவில் இருப்பன என்றேனும், இல்லாதன என்றேனும் நாம் துணி

ந்து கூறவல்லேம் அல்லேம். ஆயினும் இப்பூண்டுகளிற் பெரும் பான்மைய பெரும் பெரும் செடிக்காட்சி சாலைகளில் மாதிரிக்கு வைத்து வளர்க்கப்பட்டு வருகின்றன என்பது தெரிய வருகிறது.

இவை விசேஷமாகச் சதுப்பு நிலங்களிலும் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போன்று குளக்கரையிலும் நீரிலுமே முளைப்பன. ஆங்கு இவை முளைக்கக் காரணம் யாது? இவை மாமிசபக்ஷணிகள் ஆகையால் வேறு இடங்களில் முளைக்குமாயின் ஆங்கு இவைகள் பிடித்துத் தின்ன பூச்சி முதலியன கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்? ஆனல், சதுப்பு நிலங்களிலும் நீர் நிலைகளிலுமோ, கொசுகு, விட்டில், ஈக்கள், புழு முதலிய சிறு ஜந்துக்களும், மச்சமாதிய நீர் வாழும் பிராணிகளும் ஏராளமாய்க் கிடைக்கும். நமக்குக் கிடைக்கக்கூடிய இரைகளின் இருப்பிடம் தேடி ஆங்கு முளைப்பதே இவற்றைப் பற்றிய அதிசயங்கள் அனைத்தினும் அதி முக்கியமானது என்னலாம்.

"இஃதுண்மையாயின், செடிக் காட்சி சாலைகளில் மட்டும் இவை எங்ஙனம் வளரும்?" என சிலர் கேட்கலாம். இவ்வைய வினவிற்கு விடை இதுவே :--- இச்செடிகளைப் பரிபாலிப்பவர்கள் இவற்றை ஆங்கும் தாம் உண்டாக்கிய சதுப்பு நிலங்களிலும் நீர் நிலைகளிலுமே வைத்துப் பயிராக்கியும் இவற்றிற்கு வேண்டிய பட்டும் பூச்சி புழுக்களைப் பிடித்துத் தந்தும் வளர்ப்பர். இவை நிற்க.

இனி இப்பூண்டுகளிற் சிலவற்றையும், அவை இன்னின்ன விதமாய்த் தத்தம் இரையைக் கண்ணிவைத்துப் பிடித்துண்கின்றன என்பதைப் பற்றியும் இயன்றவாறு எடுத்து ஓதுவோம்:—

I. வெண்ணெய்ப் பூண்டு.

[Butter—wort]

இது தனது பெயருக்கேற்ப கொழு கொழுப்பும் நெய்ப் பற்றும் உள்ள ஓர் பூண்டு. இதன் இலை பிசுபிசுக்கான ஒட்டுந் தன்மையுள்ள ஒருவகைத் திரவம் கசியப் பெற்றது. இதழ் இதழாகச் சித்திரம் பூங்கொத்துக்கள் போன்றுள்ள இலைகளின் மத்தியினின்

றும் இரண்டொரு தண்டுகள் கிளம்பி நிற்கும். இத்தண்டுகள் இந்திர நீலம் போன்ற நக்ஷத்திரவடிவமான மலர்களைத் தாங்கி நிற்கும். நெருப்பு விட்டில் ஈசல் முதலியனவற்றைக் கவர்வது போல வனப்பாலும் ஒண்மையாலும் இம்மலர் பூச்சிகளைத் தன்பால் இழுக்கும். அன்றியும் தேன் குடிக்க வண்டுகளும் தேனீக்களும் பூவை நாடி வரும்பொழுது இச்செடியின் இலைகளின் பேரில் வந்து உட்காருவதுண்டு. தக்ஷணமே முற்கூறிய பசைத்தன்மையுள்ள பிசின் பேரில் இதன் சரீரம்பட அவ்விலையின் நுண்ணிய துவாரங்களில் இருந்து திரவம் முன்னிலும் அதிகமாகக் கசிந்து இலையோடு இலையாய் இதனை இறுகப்பிடித்துக்கொள்ளும். எவ்வளவுக் கெவ்வளவு பூச்சியானது தன்னை விடுவித்துக்கொள்ள முயல்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அதிக விரைவாயும் கெட்டியாகவும் அது அத்திரவத்தில் சிக்கிக்கொள்வதுடன் மூக்கு முகங்களிலும் அதனைப் பூசிக்கொள்ளும். சிறிது நேரத்திற்கெல்லாம் அது தவித்துத் தத்தளித்து மூச்சடைத்துச் சாகும். பூச்சி செத்ததின்பின்னர் இப்பூண்டு தனது சரீரத்தினின்றும், ஜீரணிக்கத்தக்க ஓர்வகை திராவகத்தை வெளிப்படுத்தித்தான் சிறைப்படுத்திய பூச்சியின் இறகு எலும்பு இவைகளைத்தவிர எஞ்சிய பாகங்களைக் கரைத்துப் பின்னர் அதனை உறிஞ்சி உட்கொள்ளும். இவ்விலையே இதற்குக் கையும் வாயும் ஆக உதவுவது.

பூச்சிகள் இலையில் பிசுபிசுப்பான பாகத்தில் உட்காராமல் அதன்மேல் பிறிதொரு இடத்தில் உட்காருமாயின், உடனே இலை சுருண்டு அவற்றைப் பிசினண்டை சேர்ப்பிக்கும். இவ்வாறு சேர்ப்பித்தவுடன் அவை முன்போலவே பூண்டிற்கு இரையாகும். இவ்விலை ஒரு தொட்டாற் சுருங்கி. அஃதாவது இதன் சுணைகளின் மேல் யாதானும் ஒன்று படுமாயின் உடனே கூச்சம் அடைந்து இலைசுருள ஆரம்பிப்பது. ஆதலால், இது, தன்மேல் தூரத்திலேனும் சமீபத்திலேனும்வந்து உட்காரும் பூச்சிகளைச்சுருட்டியது வியப்பிற்கிடனன்றே.

சில துஷ்டர்கள் இது தொட்டாற்சுருங்கி எனத்தெரிந்துகொண்டு சுத்த விளையாட்டுத்தனத்திற்காக இதன்பேரில் சிறிது மணலை அள்ளிப்போடுவர். தக்ஷணமே அது வழக்கப்படி சுருட்டிக்கொள்ள

வும் பிசின் விடவும் ஆரம்பிக்கும்—ஆனால் இவர்கள் வெட்கி முகம் வெளுக்க அது இக்காரியம் சேஷ்டைக்காகவே செய்யப்பட்டுளதென்றும் தான் பற்றிய பொருள் ஆகாரத்திற்காக உபயோகப்படுவதன்றென்றும் கண்டுகொண்ட பாவனையாக ஜீரண திராவகம் சிறிதும் வெளிப்படுத்தாமல் இருப்பதுடன் சிறிது நேரத்திற்கெல்லாம் விரிந்துகொள்ளவும் ஆரம்பிக்கும். ஆனால் மணலுக்குப் பதிலாக மாமிசத்துண்டு சொட்டுப்பால் சிறிது முட்டைமுதலியவற்றை இதன் பேரில் போட்டால் முன்மாதிரி பிசினை வெளிப்படுத்துவதுடன் திராவகத்தையும் வெளிப்படுத்தி எடுயப்பட்ட தின்பண்டத்தைக் கரைத்துக் குடிக்கும். இதனாலேயே இஃதொரு புலால் உண்ணும் பூண்டு என்பது சொல்லாமலே விளங்குமன்றோ ?.

லாப்லாண்ட் தேசத்தாரும் ஸ்வீடன் நகரத்தாரும் இப்பூண்டின் இலைபின்மேல் காய்ச்சியபாலை வார்த்துத் தயிராக்கிக் குடிப்பர்.

2. கதிர்ப்பனிப் பூண்டு.

Sun-dew

இப்பூண்டின் மலர் வெள்ளை நிறமுடையதாக இருக்கும். இதன் இலைகள் செம்மயிரால் மூடப்பட்டிருக்கும். இம்மயிர்களை இலையின் கரங்கள் என்றே சொல்லலாம். ஒவ்வொரு மயிரும் நுனியில் பனித்துளி போன்றதும் பிசுபிசுப்பானதுமான உருண்டை வடிவமுள்ள திரவம் கொண்டது. இத்திரவம் சூரிய வெப்பத்தில ஜொலிக்கும் பொழுது பனித்துளி போன்றே இருக்கும். ஆதலால், இதற்குக் கதிர்ப்பனிப் பூண்டு (Sun-dew) எனப் பெயர் கிடைத்தது. இலை ஒவ்வொன்றிற்கும் 200 அல்லது 300-கரங்களுக்குக்குறையாமல் இருக்கும். இச்செடியின் நிறத்தையும் மலரின் வனப்பையும் கணடு மயங்கியோ, அல்லது நீர்வேட்கையாலோ, யாதானும் ஒரு பூச்சி சென்று அத்திரவத்தின்மேல் உட்காரும். உட்கார்ந்ததோ இல்லையோ இக்கரம் சுருண்டு கொடுத்து கிடைத்த இரையை மற்றொரு கரத்தினிடை கொடுக்க, அஃது அதனைப்பெற்றுத் தன்பக்கத்துள்ள வேறொன்றன்பால் விடுக்கும். இவ்வாறு ஒவ்வொன்றும் அதனதன் அருகில் உள்ள கரங்களிடம் சேர்ப்பிக்கக் கடைசியில் இரையானது இலையின் மத்தி போய்ச் சேரும். இரண்டு

பூச்சிகள் ஒரே இலையில் வெவ்வேறு இடங்களில் உட்காருமாயின், மயிர்கள் இரண்டு ஜதைகளாய்ப் பிரிந்து கொடுத்து ஒரு ஜதை இப்படியும் மற்றொரு ஜதை அப்படியுமாகச் சுருட்டிப் பூச்சிகளை இலைமத்தியில் சேர்ப்பிக்கும். சேர்ப்பிக்கவே இலை கிண்ணம் போல் குழிந்து கொடுத்து ஜீரணம் செய்யும் திராவகத்தைமுன்போல் வெளிப்படுத்திப் பூச்சிகளைக் கரைத்து எலும்பு இறகு தவிர எஞ்சியவற்றை உண்டு விடும்.

3. துருத்திப் பூண்டு.

Bladder-wort.

இதற்கு வேர் கிடையாது. இஃதொரு நீர்ப்பூண்டு. இது கார்காலத்துக் கடுங்குளிரில் நீரில் அமிழ்ந்து தூங்காநிற்கும். கோடைகால வேடைப் பொழுதினில் அது நித்திரை நீங்கி மேற்கிளம்பி மிதந்து மீனையும் ஏனைய நீர்வாழும் ஜந்துக்களையும் கண்ணிவைத்துப் பிடித்துச் சம்பிரமமாக உண்ணும். இது தனது இரையைப் பிடித்து உண்ணும் விதம் அதிக ஆச்சரியகரமானது. வலைஞர்கள் நண்டு பிடிப்பது போலவே இது பூச்சிகளைப் பிடிக்கும். எங்ஙனமெனில், இச்செடியை ஒட்டிச் சிறு சுரைக்குடுக்கைகள் போன்ற பைகள் பல இருக்கும். இப்பைகளின் வாயில் திறந்திருத்தலைக் கண்டு தமக்கு நேரிடப்போகும் பிராண சங்கடத்தைப் பற்றிக் கனவுகூடக் காணாத சிறு மீன் முதலிய ஜலசரங்கள் அதனுட் புகும். ஆனால் இங்ஙனம் உட்சென்ற ஜந்துக்கள் மீண்டும் திரும்பவதில்லை.

இதற்குக்காரணம்யாதெனில், கம்பியினாற் பின்னப்பட்ட எலிக்கூட்டுக்குள்ளதுபோலவே ஒவ்வொருபைக்கும் கள்ளக்கதவு உண்டு. இக்கதவு தன்வாயிலாகச் செல்வனவற்றை உள்ளேமட்டும் செல்லவிடுமேயன்றி வெளிப்படுத்தமுடியாது. இக்கதவின் வெளிப்புறத்தில் கூச்சல்விளைக்கும் கூரியமயிரும் உள்பக்கத்தில் கட்டைமயிரும் முளைத்திருக்கும். கூட்டுக்குள் சுலபமாய் நுழைந்த எலி எவ்விதம் பிறர்விடுவிக்குமட்டும் வெளிவராவோ அவ்வாறே இப்பைக்குள் சென்றவைகளும் வெளிவரா. அவைகள் திரும்பி வெளிக்கிளம்ப முயற்சிப்பினும் அவற்றிற்கு முன்னிலும் தொந்தரவே விளையும். ஏனெனில் அவை அங்கும் இங்கும் புரள்வதால் கட்டைமயிர்கள் குத்தித்

தொந்தரிக்கும். ஆனது பற்றி அவை வெளிக்கிளம்பவேண்டும் என்ற வீண் எண்ணமே கொள்ளா.

4. ஈப்பொறிப் பூண்டு.

Fly-trap

இதன் இலைகள் கதிர்ப்பனிப் பூண்டின் இலைகளைப் போன்று ஒன்றை ஒன்று அடுத்தடுத்திருக்கும். ஆயினும், நாம் இலையென்று குறிப்பிட்டுக் கூறுவது அதன் நுனியில் உள்ள பாகத்தையே. ஏனெனில் ஏனையபாகம் தடித்தஇலைபோன்ற தட்டையான தண்டுகளே. இலை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு வட்டமடல்களாலானவை. இவ்விரண்டு மடல்களும் முதுகு குப்புறவைத்து விரிந்துகிடக்கும் புத்தகங்கள்போன்ருவது அல்லது திறந்துவைத்த எலிப்பொறிபோன்ருவது இருக்கும். எலி இடுக்கிபோன்றே இதழ்ஒவ்வொன்றும் ஓரங்களில் அரம்பம்போன்ற பல பற்கள்கொண்டவை. இதழ்களின்மத்தியில் மெல்லிய மயிர்கள் முளைத்திருக்கும். இம்மயிர்களுக்குச் சுணை என்று பெயர். இச்சுணைகளே இலையின் தும்பிகளாகும். இவற்றிற்குப் பரிசவுணர்ச்சி அதிகம்.

யாதானும் ஒருபூச்சி இச்சுணையின்பேரில் வந்து உட்காருமாயின் திறந்தபுஸ்தகம்போன்ற இலையின் இதழ்கள் அதிவிரைவில்மூட ஆரம்பிக்கும்; தக்ஷணமே எலியிடுக்கிபோலவே இவற்றின்பற்கள் ஒன்றை ஒன்று இறுக்கி நெருக்கிக்கொள்ளும். பின்னர் இதழ்களுக்கிடுக்கிலும் அவற்றிற்குள்ளும் அகப்பட்டுக்கொண்ட சிற்றுயிர்ப் பிராணிகளின் கடினபாகங்கள் தவிர எஞ்சியபாகங்கள் கரைத்து உண்ணப்பட்டதன்பின்பே இலை மீண்டும் இரைபெற விரிந்துகொள்ளுமாம்.

5. கமண்டலப் பூண்டு.

Pitcher-plant.

இது விசேஷமாய் உஷ்ணதேசங்களிலேயே உற்பத்தியாவது. ஆயினும் இது குளிர்ந்தநாடுகளில் உள்ள செடிக்காட்சி சாலைகளிலும் காணப்படும். ஆங்கு இதன் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் வேண்டியசூடு அச்செடியைச்சுற்றிலும் கொடுபட்டிருக்கும். இதன் இலைகள் கமண்டலம்போன்று வளர்வதால் இவற்றைக் கொண்ட

செடிக்குக்கமண்டலப் பூண்டு எனப் பெயர்வாய்ந்தது. சிலசெடிகளின் கமண்டலங்கள் திருகிவளைந்திருக்கும். வேறுசிலவற்றின் கமண்டலங்கள் படர்கொடிக் கூந்தல்போன்றுள்ள நுண்ணியகொடியினின்றும் தொங்கிநிற்கும். இக்கமண்டலங்கள் சுமார் 9 அங்குலம் ஆழமுள்ளனவாயிருக்கும். கமண்டலம் ஒவ்வொன்றும் கொஞ்சங் குறைய நீர்கொண்டது. அதற்குக்கனத்துத் தடித்த விளிம்புண்டு. அவ்விளிம்பு தேன்ததும்பப் பெற்றது. கமண்டலத்தின் உட்புறம் சிறிதும் கரடு முரடின்றிச் சமமாக இருப்பதுடன் வழுக்கக்கூடியதாயும் இருக்கும்.

சாதாரணமாக பூச்சி முத்துமுத்தாய் உருண்டைவடிவோடு கூடியுள்ள இனியதேனையுண்ண விரும்பியோ அல்லது நேத்திரானந்தத்தைப்பயக்கும் அதன் நிறத்தைகண்டு மயங்கியோ அதில் வந்தடைகின்றன. இவ்வாறு அடையும்பொழுது எண்ணிறந்த பூச்சி தாமாகவே வழுவி திரவத்தில் விழுந்துவிடும். அவை விழுவதுதான் தாமதம்; தக்ஷணமே அவை தப்பி வெளிக்கிளம்பிவிடாவண்ணம் அத்திரவத்திலேயே தயாராய் மிதந்து காத்துக்கொண்டிருக்கும் கட்டைமயிர்கள் அவற்றை மூச்சடைத்துச்சாகத் தண்ணீரில் மூழ்த்தும். பூச்சிகள், செத்தவுடன், திராவகத்தில் கரைந்து உருமாறும். பின்னர் இவற்றின்சாரம இலைகளால் கிரகிக்கப்பட்டுச் செடிக்குச் சிறந்த உணவாகும். இவ்வாறு குருவிகளும் இக்கமண்டலங்களைத் தங்கட்கேற்ற கூடுகளெனமதித்து ஏமாந்து இறந்து செடிக்கு இரையாகுமாம். நிற்க.

இச்செடிகள் சம்பந்தமாய் நாம்சில கூறவேண்டிவருகிறது. அவை யாவெனில், மாமிசபோஜனத்திற் பிரியம்கொண்ட மாக்கள் சிலர் "கேவலம் செடிகளே மாமிசம் உண்ணும்படி படைக்கப்பட்டிருக்கும்பொழுது மனிதர்கள் உண்பதனால் தவறு என்னை?" என்று வாதம்செய்யக்கூடும் என்பதே.

இவ்விதம் தர்க்கக்ஷிபேசுவோர் கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுட்டேரைக்கும் விருப்புற்றமுதளிக்கும் மெய்யனாகிய ஈசுவரன் அததற்குஏற்ற உணவுகொடுத்து அற்பவஸ்துவையும் காத்து ரக்ஷிக்கின்றார் என்றும், பூண்டுகளிலும் தமோகுணப் பூண்டுகள் உள

என்றும் மட்டுமே கொள்ளவேண்டும். ஏனெனில் புலிபசித்தாலும் புல்லைத்தின்னாது. மாமிசத்தையே உண்ணும். மனிதனோ அப்படியல்லன். சாகபக்ஷிணியாகவே இருத்தலால் அவனுக்குக்கேடொன்றும் இல்லை. பகுத்தறிவுள்ளவனாய்ப்பிறந்த மனிதன் மாமிசபக்ஷிணியாகவே இயற்கையில் பிறந்துளான் என்றே வைத்துக்கொள்ளுவோம். ஆயினும் விவேகாநந்தசுவாமிகள் கூறும் வண்ணம் மனிதன் பிரகிருதியை ஜயிக்கிறதற்கென்றே பிறந்திருக்கிறவனானதாலும் கண்மூடித்தனமாய் அதனைப்பின்பற்றத் தோன்றினவனல்லனாதலாலும் அவன் தன்னுடைய சொந்தநன்மையை நாடி சாகபக்ஷிணியாகவேண்டியது அவசியம். ஏனெனில் மாமிசபோஜனத்தால் ஒரு சிறிதும் மனத்தூய்மை உண்டாகாது. மிருகக்காட்சிசாலை சென்று பார்த்திருக்கும் எவனும் இதன் உண்மையை அறிந்தே இருப்பன். சாகபக்ஷிணியாகிய மலைபோன்ற யானையும் சாந்தமும் சாதுவுமாயிருக்கிறதும் கூட்டில் அடைபட்டிருக்கும் மாமிசபக்ஷிணிகளாகிய சிங்கமும் புலியும் அரைநாழிகை நின்ற இடத்தில் நில்லாமல் குரூரசெயல்களைக்காட்டி நிற்றலும் யாவரே அறியாதார்? ஒன்று சாதுவாயும் மற்றது மூர்க்கமாயும் இருத்தற்குக்காரணம் அதது உட்கொள்ளும் ஆகாரம் அன்றோ?. மனிதன் முன்னோக்கிச் செல்லவே பிறந்துள்ளானாதலால் பரத்தை நாடுவோனுக்கு மாமிச போஜனம் ஒருசிறிதும் தகாது என்றறிக. நிற்க.

இதனால் அணுதரிசனி என்றபூதக்கண்ணாடிகொண்டு நாம் அதிநுட்பமாய் உற்று நோக்கி அறியும் நுண்ணிய அணுக்கள் முதல், தூரதி நஷ்டிக் கண்ணாடி கொண்டு சோதித்தறியும் அதி பிரமாண்டமான கிரகங்கள் ஈறாகவுள்ள யாவும், ஆராய்ச்சிமிக்குள்ள அறிஞர்களுக்கு ஆச்சரியம் விளைவிப்பதுடன், அவர்களுடைய அறிவு விசாலத்திற்கும் மெய்ப்பொருள் உணர்ச்சிக்கும் ஏதுவாக இருக்கின்றன என்றும், ஈசுவர சிருஷ்டியில் அற்பமானதும் அநாவசியமானதும் யாதொன்றும் இல்லையென்றும் கரதலாமலகம்போல் தெள்ளிதற் புலப்படுகின்றன. ஆதலின், அடிக்கடி நாம் பார்த்துப்பார்த்து இருப்பதால், சாதாரணமானதென்று யாதானுமொன்று தோற்றினாலுங் கூட அதனைச்சிறிது ஆழ்ந்து உற்று நோக்கி ஆராய்ந்து அதனைப் பற்றி முன்பு அறிந்தே இராத பல அதி விசித்திரமான விஷயங்களை அறிந்துகொள்ள நாம் இனியேனும் முயலுவோமாக.

M. கோபாலகிருஷ்ணையர்,

அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச் சங்கம்,

&

Assistant Master A. M. High School, Madura.

சமாசாரக்கொத்து.

நம ஆம்த்ஹில் பிரபு அவர்கள் நாளிது அக்டோபர்மீ 24, 25, 26-ம் தேதிகளில் திரிசிரபுரம், ஸ்ரீரங்கம் முதலிய இடங்களுக்கு விஜயஞ்செய்து சென்னைக்குத்திரும்பினர்.

* * *

நாளிது அக்டோபர்மீ 24உ செவ்வாய்க்கிழமை பாளையங்கோட்டை ஜெனரல் அல்லது கம்பைண்டு ஆஸ்பத்திரி ஸ்தாபனவிஷயமாய் திருநெல்வேலி ஹிந்துகாலேஜில் நடந்தகூட்டத்தில் எட்டயபுரம் ஜமீந்தாரவர்கள் ரூ. 15,000 நன்கொடையளித்ததைக் கேள்வியுற்று மிகவும் சந்தோஷிக்கின்றோம்.

* * *

கோழிகள், புருக்கள் இவைகளிடுகின்ற முட்டைகளில் அடிக்கடி ஒரு முட்டையினுள்ளே மற்றொருமுட்டை இருக்கிறதாம்.

* * *

சீயம்நாட்டுத்தோட்டங்களில் ஒருவகைச்செடியிருக்கிறதாம். அதன் கிளைகளைச்சிறுதுண்டுகளாக வெட்டி மெழுகுவர்த்திபோல் கொளுத்திவிட்டால் நல்ல வெளிச்சம் உண்டாகிறதாம். நம் நாட்டிலுள்ள மலைகளில் சூழ்ந்துக்கட்டையென்று ஒன்றிருப்பதை யாவரும் அறிந்திருக்கலாமே. பச்சையாய் முறித்துக்கொளுத்தினுல் வழிப்போக்கர்கள் அதை வீசிவீசிக்கொண்டு இரவுமுழுவதும் பிரயாணம் போகலாம். பகவத் சிருஷ்டியின் அற்புதத்தைத்தான் நாம் என்சொல்வோம்.

* * *

ஹைகோர்ட்டு சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஆர்னுல்ட் வொயிட் என்பவர் ரஜாவினின்றும் திரும்பிவந்துவிட்டபடியால் ஆக்டிங் ஹைகோர்டு ஜட்ஜி வேலைபார்த்த மிஸ்டர் சங்கரநாயரவர்கள் மறுபடியும் வக்கீலாகப்போய் விட்டார்கள்.

* * *

இந்தியாவில் சென்றுண்டுக்கணக்குப்படி 2139 அச்சியந்திரசாலைகளும் 709 பத்திரிகைகளும் உள்ளன. 763 நகர்பரிபாலன சபைகளும் 10207 சபைஅங்கத்தினரும் உண்டு. நியாயசபை கோர்ட்டு வரும்படி ரூ. 38148689; செலவு ரூ. 36609997.

16 பிராயத்துக்குட்பட்டவர்கள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப் போகக்கூடாதென்று உத்தரவு பிறந்திருக்கிறது. இது மிகவும் அநீதியே.

* * *

சிலோனில் மதுபானத்தால் வருமானம் 22 கோடி ரூபா. இதனுல் ஆங்குக் குடிவெறியதிகமென்று விளங்குகின்றது.

* * *

இம்மாதம் திருவாங்கூர் மகாராஜா அவர்களுடைய 48-வது பிறந்தநாள் வைபவம் திருவனந்தபுரத்தில் மிகவும் விமரிசையாகக்கொண்டாடப்பட்டது. பல்லாயிரம் ஜனங்களுக்கு அன்னமளிக்கப்பட்டது.

* * *

1904ஹூத்தில் மாத்திரம் பர்மா சுரங்கங்களினின்று 8,53,28,491 டன் நிறையும் 51,88,688 ரூபா விலையுமுள்ள மண்ணெண்ணெய் எடுக்கப்பட்டிருக்கிறதாம்.

* * *

ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் நான்கு பறக்கும் தரிகள் வாங்கி மதுரை ஸௌராஷ்டிர ஜாதியாரின் உபயோகத்துக்களிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருப்பது மிகவும் சந்தோஷிக்கத்தக்கதே. இவர்களே மதுரை பிரமஞானசபைக்குச் சென்ற ஆண்டில் ஒரு அற்புதக்காட்சிக்கண்ணுடி வாங்கிக்கொடுத்திருப்பது யாவரும் அறிந்த விஷயம்.

* * *

கற்பூரம் ஒருவித மரத்திலிருந்து உற்பத்தியாகின்றது. அதன் விலையதிகமாயிருப்பதால் டர்பன்டயின் என்னும் திரவவஸ்துவிலிருந்து கற்பூரம் எடுக்க யத்தனித்துவருகின்ருர்கள். மனிதனும் எல்லாவற்றையும் சிருஷ்டிக்கப்பார்க்கிருன்.

* * *

1903-04 வருஷத்தில்மட்டும் மேனுட்டிலிருந்து 31 கோடி ரூபாய் பெறுமான துணிகள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன. நம் நாட்டுப்பணம் எப்படி வெளியேறுகிறது பார்த்தீர்களா!

* * *

பூட்ஸ்களுக்கு மோடார் சக்தியினுல் மணி ஒன்றுக்கு 12 மைல் போகும்படிக்கும் நினைத்த இடத்தில் நிறுத்தும்படி இடுப்பில் கட்டிக்கொள்ளும்